# நிலவு

மலர் 1 { செப்டெம்பர் } இதழ் 1

T. 2053

ஆசிரியர்: பூ. கணேசன் B. A. (HONS.)

●

நிலவு பேசுகிறது
பெருந்தலைகள்
உலைக்கூடத்தில்
அவர்கள் கதி .....?
பொது அறிவு பெற......
கேளுங்கள்
ஏன் திராவிடரென்கிறோம்?
முல்லையின் முறிந்த காதல்
கடவுள் எண்ணமும் மதமும்
எனது குறை
அறிஞர் பக்கம்
சோழன் பெருநற்கிள்ளி
அன்பர்கள் மேடை
புத்தக மேடை

153
003

●

விலை நான்கணா

நிலவு நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை.

# நிலவு பேசுகிறது

உலகவல்லரசுகள் ஜனநாயகப் போர்முறைக்குக் கட்டுப்பட்டு, மக்களின் ஒன்றுபட்டக் கோரிக்கைக்கு இணங்கி, பொதுமக்கள் ஆட்சிக்கு மதிப்புக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தநிலை வந்துற்ற வேளை. சுதந்தரம், சுதந்தரம் என்று சர்வதேசங்களிலும் விடுதலை கோஷம் எழுகின்றவேளை. மக்களுக்காக. மக்களால் மக்களைக் கொண்டமையும் சர்க்கார்கள் அகில உலகிலும் பூத்துக்கொண்டிருக்கிறவேளை. மானிடவர்க்க மேம்பாட்டுக்கு அமைதி, சமாதானம், பாதுகாப்பு தேவை, தேவையென்ற பொன்மொழிகள் ஆங்காங்கு வலியுறுத்தப்பெற்று வரும்வேளை. காலநிலை, கருத்துநிலை, நிர்ப்பந்தநிலை ஆகியவற்றையனுசரித்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டத்தின் மாட்டு வைத்திருந்த பிடிப்பைத் தளரவிட்ட வேளை. இந்த சாதகமான வேளையில் 'நிலவு' வெளிப் புறப்படுகிறது

இந்திய ஆட்சி அதிகாரம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையிலிருந்து வடநாட்டு முதலாளித்துவத்தின் கைக்கு மாறிய நேரம், உலகந்தூற்றுமேயென ஓரளவு அஞ்சியஞ்சி காரியம் செய்து வந்த ஆங்கில ஏகாதிபத்தியம் மாறி, தான்றோன்றித்தனமிக்க பாஸிஸக் கும்பலின் ஆதிக்கம் தலையெடுக்கும் நேரம். அறிவு, ஆராய்ச்சி விஞ்ஞானம் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கப் பின்வாங்காத பிரிட்டிஷ் அதி

கார சபை வெளியேறி, மௌட்டீகத்துக்கும் மூடநம்பிக்கைக்கும், கண்மூடித்தனத்துக்கும், கீழ்மனப்பான்மைக்கும் மக்களை என்றென்றும் ஆளாக்கி விடப்போகும் பிற்போக்கு சக்திகள் ஆட்சி பீடமேறி விட்ட நேரம். இந்நாட்டில் தாழ்த்தப்பட்டோரையும், ஒதுக்கப்பட்டோரையும், சிறுபான்மையோரையும் சலுகை விழைந்தோரையும் கவனித்து ஆவன செய்யத்தவறாத ஆங்கில அன்னிய ஆட்சி மறைந்து, சாதிமதவெறி ஆணவம் பிடித்த வடநாட்டுத் தேசிய ஆட்சி உருவாகும் நேரம். இந்த நெருக்கடியான நேரத்தில் 'நிலவு' வெளிப் புறப்படுகிறது.

சென்னை மாகாணமெனும் இத்திராவிடநாடு மேலைநாட்டுப் பரங்கி முதலாளியின் நேரடி ஆதிக்கத்தினின்றும் அகன்று, வடநாட்டு பனியா முதலாளியின் நேரடியோடு மட்டுமின்றி நிரந்தர ஆதிக்கத்துக்கு ஆட்பட்டுவிட்ட காலம். வெள்ளைநிற ஆரிய ஆட்சியொழிந்து மஞ்சள் நிற ஆரிய ஆட்சி நிலைபெறும் காலம். கடவுள் மதம் என்ற பெயரால் தகுதி திறமையென்ற பெயரால் இந்நாட்டுப் பெருவாரி மக்கள் வஞ்சிக்கப்படப்போகும் காலம். உழைப்பை முதலாக வைத்து, ஆண்டாண்டு தோறும் உழைத்து உழைத்து அலுத்ததன்றி வேறொன்றுமறியாத பாட்டாளி வர்க்கத்தை, உல்லாச வாழ்வின்றி வேறொன்றுமறியாத பணமூட்டைக் கூட்டம் அடிமைப்படுத்தத் திட்டம் வகுக்கும் காலம். இந்த பாதகமான காலத்தில் 'நிலவு' வெளிப் புறப்படுகிறது.

நாட்டில் உணவுப் பஞ்சம்; துணி நெருக்கடி; இடவசதியின்மை. அறிவுபஞ்சம் வேறு ஆணவத்தோடு தலைவிரித்தாடுகிறது. அறியாமை இருள் விளக்கி, அறிவொளி பரப்பி, பகுத்தறிவைத் திக்கெட்டும் தூவவேண்டிய அரசியலாரும் தலைவர்களும் மக்களை என்றென்றும் மீளா மௌட்டிகத்தில் மாய்க்கும்

திட்டங்களை, ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தி வருகின்ற பொல்லாத சந்தர்ப்பத்தில் உதித்தெழுகிறது 'நிலவு'.

'நிலவு' தனது கடமையுணர்ந்து பணியாற்றும். 'நிலவு' தான் ஆற்றப்போகும் தன்னலமற்ற மகத்தான தொண்டுகளுக்கெல்லாம் தோழர்களின் அன்பு, ஆதரவு, ஊக்கம், உற்சாகம் இவற்றைமட்டுமே விலையாகக் கேட்கிறது.

பகுத்தறிவு வளரட்டும்!

சுதந்தரத் தனியரசு மலரட்டும்!!

* * *

## திராவிடநாடு பிரிவினை மாநாடு

தென்னார்க்காட்டின் தலைநகராகிய கடலூரில் செப்டெம்பர் 14-ந்தேதியன்று, திராவிடநாடு பிரிவினை மாநாடு - மாகாண மாநாடு. திராவிடர் கழக சார்பில் மட்டுமன்றி சென்னை மாகாணத் திராவிடரனைவருடையவும் சார்பில் நடைபெறுகிறது. திராவிடநாடு பிரிவினை நியாயமானதென நினைப்போரும் அவசியம் என்று கருதுவோரும், அடைந்தே தீருவோமென்று அறைவோரும் ஒன்று சேருவர், இம்மாநாட்டில். எல்லாக்கட்சி எல்லா மதம், எல்லா சாதிப் பிரதிநிதித்துவமும் பெற்றுநிற்கும் மாநாடு. பிரிவினை சம்பந்தமாக உடனடியாக மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகள் வகுக்கப்படும் மாநாட்டில். திராவிடரே! திரண்டு வாருங்கள். கடலூர் உங்களையுணர்ந்து அழைக்கிறது. செப்டெம்பர் 14-ந்தேதி! நினைவில் வையுங்கள்!!

---

# வாழ்; வாழவிடு

---

# பெருந் தலைகள்

[சர்வதேசங்களிலும் சரித்திரத்தை யுண் டாக்கும் பெரியோர்கள், தலைவர்கள், அறி ஞர்கள் தொண்டர்கள் ஆகியோரின் அவ் வப்போதைய நடை முறை இப்பகுதியில் விளக்கப்படும்]

**கொலையுண்டார்:**

சுதந்திரப் பாதை நிறுவுவதில் ஈடுபட்டிருக்கும் தறுகணாளரின் நீங்காப் பகைவர்கள் பிற்போக்கு சக்திகளென்ற உண்மை மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. விடுதலை வீரர் ஆங்சான் விஷயத்தில். தன் மக்களுக்கு சுதந்திரமென்பது எதுவென உணர்த்தி, அதன் சிறப் பையும் மேன்மையையும் எடுத்துக்காட்டி, தனது அறிவு மேம்பாட்டாலும் ஆற்றல் வன்மையாலும் அத்தகைய சுதந்தரத்தை தன் மக்கள் நுகரவழி வகுத்து வெற்றிபெற்று வாகைசூடும் தருவாயில் பர் மியரின் கண்போன்ற காவலர் யூ. ஆங்சான் அக்கிர மக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பாஸிஸ்ட் எதிர்ப்பியக்க முன்னணித் தலைவராக இருந்து, உலகப் போர் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுவிட்ட ஆங் சானை வஞ்சனையாளர் விட்டுவைக்க மனமிலராய் சுட்டுக் கொன்றிருக்கின்றனர், பர்மா இடைக்கால சர்க்காரின் துணைத்தலைவர், 34-வயதுகூட நிரம்பப் பெறுதவர் நிர்வாக சபையிலமர்ந்து, அரசியல் காரி யங்களைக் கவனித்துக் கொண்டிருக்கும் வேளையில் கயவாளி மக்கள் சிலரால் சுட்டுண்டு மாண்டார்.

ஆங்சானின் இக்கொலைச் சம்பவத்தின் திரைமறைவில் நின்ற சூத்திரதாரி யாராயிருந்தாலும் சரி இவரது மறைவால் பர்மாவின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிட்டது; அந்நாட்டு மூத்தோர், இளையோர், குழவியர் பெண்டிரனைவரும் தாயற்ற, திக்கற்ற நிலைமைக்கு ஆளாகிவிட்டனர். விடுதலை வருக்கும் வேளையிலேயே உயிரையீந்த ஆங்சானின் புகழும் இரட்டிப்பாகியது. சுதந்திர தீரர் ஆங்சானின் பெயர் என்றென்றும் நின்று நிலைக்கட்டும்!

* * *

**நன்கு சொன்னார்:** பகற்கனவென்று வெறுத் தொதுக்கப்பட்ட 'பாகிஸ்தான்' இன்று இறுகிய உண்மையாகிவிட்டது! இந்திய உபகண்டத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்து கொண்டு, தனியாட்சி, தனி நிர்வாகத்துக்கு வழிவகுத்துக் கொண்டது. பாகிஸ்தான் பிரிந்த பின்னருங்கூட இந்திய உபகண்ட எஞ்சிய பகுதியை "இந்தியா" எனக்கட்டுப்பாடாகக் கூறி வருவது கேலிக்கூத்தாகும். இதைத்தான் சர் ஹெர்பெர்ட் கீலி என்பவர் டெய்லிடெலகிராப் பத்திரிகையில் அம்பலப்படுத்தியுள்ளார். அவர் கூறுகிறார்: பாகிஸ்தான், ராஜஸ்தான்போன்று முன்னாள் இந்தியப் பகுதிகளைத் தனித்தனியேபிரித்து எடுத்துவிட்ட பிறகும், மீதி பாகத்தை "இந்தியா" என்று கூறிவருவது, ஐரோப்பாவிலிருந்து ஸ்பெயின், கிரீஸ், ஆஸ்டிரியா, போலந்து, ஸ்கேண்டிநேவியா முதலிய நாடுகளைத் தனியே பிரித்து எடுத்துவிட்டு, மீதிபகுதியையும் "ஐரோப்பா" என்று கூறிவருவதற்கு ஒப்பாகும்." எவ்வளவுதான் கட்டுப்பாடான பிரசாரமும், தான்றோன்றித்தன தாண்டவமும் மேலிட்டாலும் சரி, உண்மையை மறைக்கமுடியாது; உலகவரை மூட முடியாது.

* * *

**வாகை சூடிய வீரர்:** பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் ஜனாப் ஜின்னா மீதி இந்தியாப் பகுதியைச் சேர்ந்த

டெல்லியிலுள்ள தனது விடுதியை விற்றுவிட்டார் டால்மியா வம்சத்தாரொருவருக்கு ' எனப்பத்திரிகைச்செய்தியொன்று கூறிற்று. இச்செய்தியின் தத்துவம்வெறும் வியாபாரரூபாயணு பைசாவில்மட்டும் அடங்கிவிடவில்லை ஜின்னாவின் அரசியல் மேதைத்தன்மையின் அம்சமொன்றும் இதில் பொதிந்து கிடக்கிறது. இந்தியா இரண்டு கூருனது, பாகிஸ்தான் கொள்கையின் வெற்றியென்று முடிவுகட்டார் அரசியல் நுணுக்கமறிந்தார் எவரும்; பாகிஸ்தான் கர்த்தா ஜனுப் ஜின்னுவின் வெற்றியே அது. ஜனுப் ஜின்னு தவிர்த்த வேறெந்த தலைவரின் கீழும் பாகிஸ்தான் பகற்கனவாகவே இன்றுமிருந்திருக்குமெனில், அது உண்மையைத்திரித்துக் கூறுவதாகாது. அரசியலறிஞர் சட்ட வல்லுநர் ஜனுப் ஜின்னுவின் உயர்ந்த நற்பண்புகளும், எவர்க்கும் வளைந்து கொடுக்கா மனோபாவமும், விடாமுயற்சியும், அரசியல் தந்திரமுமே இஸ்லாமியர் இன்பபுரி நிறுவிக்கொள்வதற்குத் துணைக்காரணங்களாக நின்றனவென்றால், அதனை மறுப்பார் யாரே?' இஸ்லாமியரின் இன்பவாழ்வே என் சொந்தவாழ்வு' என்ற குறிக்கோளுடன், " பாகிஸ்தான், இன்றேல் கபர்ஸ்தான் " என்று முழக்கிக் கொண்டு, அப்புனித நாடுகாண தனதுஉடல், பொருள் ஆகியவற்றைத்தந்து, ஆவியையும் பணயமாகவைக்க ஆயத்தமாயிருந்த ஜின்னு, பாகிஸ்தான் பிரச்னையை உலகறிந்த பிரச்னையாக்கியதோடு சர்வதேச சமாதானம் விழைவோருக்குத் தலைவலியையும் உண்டாக்கிவிட்ட ஜின்னு, தனது பொதுவாழ்வில் அன்றுமுதல் இறுதிவரை கையாண்ட அரசதந்திர வேலைகள் பலவற்றுள் இதுவுமொன்ருகும்.

மொழி, கலை, நாகரீகம், கோட்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றுள் தனித்தியங்கும் இஸ்லாமிய இனத்தவருக்கு சுதந்தர ஆதிபத்ய தனித்தாயகம் வேண்டுமென்ற தனது கோரிக்கையில் முழு வெற்றி பெற்றார் ஜனுப் ஜின்னு. கட்டுப்பாடான எதிர்ப்பு சக்திகளுக்கும், ஒருசார்பான உலக அபிப்பிராயத்துக்குமிடையேயும் இவ்வெற்றியைப்பெற்ருர். வெற்றிபெற்று வாகைசூடிய

வீரர், தனது வெற்றியின் அம்சத்தை விளக்க, தனது இலட்சியம் ஈடேறியதைமெய்பிக்க, தன்னையும் தனது கொள்கையையும் கேலியும் கிண்டலுஞ்செய்து ஏதேதோ பேசியோர் ஏக்கமுறுகிறக, அகிலஉலகமும் விஷயவிளக்கம் பெறவே தனது டெல்லி இல்லத்தை விலைக்குமாறினார். ஜனப் ஜின்னா இனி டெல்லிக்குச்செல்லாமல் இருந்துவிடப் போவதில்லை; "வரலாற்றுச் சிறப்புடை டெல்லி"யில் அவருக்கென ஒரு தனி விடுதியிருப்பதிலும் தவறில்லை. எப்படியிருப்பினும், இவ்வளவு விரைவிலும் அவர் விற்றிருக்கவேண்டியதில்லை. ஆனாலும் ஏன் விற்றார்? இதில்தான் அவரது தந்திரம் அடங்கியிருக்கிறது. இந்துஸ்தானத்திலிருந்து பாகிஸ்தானின் முழு விடுதலைக்கு உழைத்து, இலட்சியம் நிறைவேறப்பெற்ற ஜனப் ஜின்னா அவ்வெற்றியின் அறிகுறியாக, இந்துஸ்தானத்துடன் சிறப்பான தொடர்புகள் இனியில்லையென அறிவுறுத்தவே அவ்வில்லத்தை விற்றார். இல்லத்தை விற்றதுமட்டுமன்றி, இந்துஸ்தானுக்கு 'வளனும் நலனும் சுரக்க' என வாழ்த்தி, 'டெல்லி மக்களிடை அமைதி நிலவுக' என் ஆசிகூறி காராச்சிக்கு விடைபெற்றார் இலட்சிய வீரர்.


'போகாதவூருக்கு இல்லாத வழியைப் புரியாத பாஷையில்' சொல்கிறாரென வாய்ப்பறையடித்த வம்பரின் கொட்டமடங்க பாகிஸ்தான் — புனிதநாடு — நிலைபெற்றுவிட்டது. உலகவரலாற்றில் அரசியல்வாதியெவருமே சாதிக்காத அரும்பெரும் வெற்றியை ஜின்னா சாதித்தார். வாகைசூடிய வீரரை வாழ்த்துவோம்!

* * *

## அறிவில் சிறந்து தொண்டில் திகழ்ந்தோன்

அறிவின் அம்சங்கள் பலவும் பூரணமாக நிரம்பப் பெற்ற பூரணலிங்கனார் மறைந்தார். அவரது மறைவு தமிழுலகுக்கு மட்டும் மன்றி அறிவுலகுக்கே ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இராவணப்பெரியார் இயற்றிய பேரறிஞர் பூரணலிங்கமவர்கள் மாணவராய் இருந்த

காலத்திலேயே குருவைவிஞ்சியசீடராவார். ஆங்கில இலக்கியத்தையொட்டிய நுணுக்கமான ஆராய்ச்சி விஷயங்கள் சம்பந்தமாக, கல்லூரியாசிரியர்கள் சிலர் நம் பூரணலிங்கனரிடமிருந்து தெளிவுபெறுவதுண்டென்பது இரகசியமாகும் இராவணனைமனிதப்பட்டியலில்வைத்து பேசுவதேபாவம், மகத்துரோகமெனகருதிய பண்டிதர்கள் வாழ்ந்த நாட்களிலேயே, பழந்தமிழனவன், ஆரியவைரி, இராவணனின் உண்மைச்சிறப்பியல்களை யெடுத்தோதி அவனுக்கு 'இராவணப்பெரியார்' என்ற தகுந்த பட்டத்தையும் தந்தளித்த அன்னவரின் செம்மையறிவுக்கும், நாம் மிக மிகப் பெருமைப்படவேண்டியவர்களாயுள்ளோம். படித்து பட்டம் பெற்று. பதவியிலமர்ந்தோர் பெரும்பாலோர்க்கு நாடு மொழி. இனம், கலை முன்னேற் விஷயங்களில் நாட்டமே இருப்பதில்லையென்று கூறலாம் அக்காலத்திலேயே பூரணலிங்கனர் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் முன்னேற்றத்துக்கும பெரிதும் உழைத்தவரராவார். ஓய்வுபெற்று, பெருமூப்பெய்தி 82-வயது நிரம்பியும் அவரது எண்ணம் தமிழ், தமிழர்பேரில் தான். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்புவரை அவரது எழுத்தோவியங்கள் திராவிடர்கழக "ஜஸ்டிஸைட்" ஆங்கில வாரப்பத்திரிகையில் வந்து கொண்டிருந்தன, எம். எஸ். பி. என்ற பெயரில் அவரது கட்டுரைகள் வாரந்தவருது வந்தனவெனில், அவ்வெண்பது வயது தாண்டிய மூதறிஞர்கொள்கைச் சிறப்பை என்ன சொல்லால் வாழ்த்துவது? அன்பிற்சிறந்து, அறிவிற்சிறந்து, ஆராய்ச்சியில் வளர்ந்து, தொண்டில் திகழ்ந்து, மூப்பில் மறைந்த பூரணலிங்கத்தைத்தமிழகம் மறக்காது.




# அழித்தொழித்துப் புதையுங்கள்!

"அதிகாரம் மாறிற்று; மக்கள் மனம் மாறவில்லையே, வகுப்புக் கலவரங்களின் அளவும் தீவிரமும் குறைந்தபாடில்லையே" என்று மனமுடைந்து கூறுகிறது, முஸ்லிம்லீகின் அதிகாரப் பூர்வமான ஆங்கில தினசரி டான். என் செய்வது? சாவதேசங்களுக்கும் சோபிதமளிக்கும், அதே நேரத்தில் சோகத்தையும் அளிக்கத்தவறாத உபகண்டமல்லவா இவ்விந்தியா? உலகநாடுகள் எங்கணும் அரசியலதிகாரமும்; பொருளாதார ஆதிக்கமுமே ஆட்சிபீடத்திலிருக்கும். ஆனால் இவ்வுபகண்டத்தைப் பொறுத்தவரை இவை இரண்டும் ஆட்சிபீடத்திற்குத் துணை செய்கின்றனவே யன்றி, உள்ளபடி ஆட்சியிலமர்ந்திருப்பது வருணாச்சிரம சாதிப் பிரிவு ஊழல்கள் மலிந்த இந்துமதமே. பழங்கால முதற்கொண்டு ஒரோர் சந்தர்ப்பங்களில் உதித்தெழுந்த கொள்கைகள் மறைக்கப்பட்டுப் போனமைக்கும, பௌத்தம் மறைந்தமைக்கும், ஜைனம் க்ஷீணித்தமைக்கும், முற்போக்கு சக்திகள் மறைந்துபட்டமைக்கும் பொறுப்பாளியாயிருந்தது இப்பாழும் மதந்தானே! ஜனநாயக நாகரிக அரசியல் முறையை நடைமுறையில் நிறைவேற்றுகிறோமெனப் பறைசாற்றிக்கொள்ளும் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதி சர்க்கார் இங்கு இத்தனை காலம் ஆட்சி நடத்தியதே, அதனாலாகிலும் முடிந்ததா? பச்சை வர்ணாஸ்ரமந்தானே ஆட்சி புரிந்தது இங்கு. எனவே, இந்தியாவின் குறைபாடாய் என்றென்றும்

இருந்து, எய்தப்பெற வேண்டியதாய் நின்றது அரசியல் விமோசனமல்ல; சுதந்திர ஆதிபத்திய சுயேச்சையாட்சி மட்டுமல்ல, உன்னத சமூகவிடுதலையே இங்கு உடனடியாக வேண்டற்பாலது. மனிதனுக்கு மனிதன் அடிமையென்ற நிலை மாறாது, உலக வல்லரசுகளுடன் தோளோடு தோள் உரசும் நிலை எய்தி என்ன பயன்? ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இந்தியா இடம் பெற்றுவிட்டது, ஆசியாவின் ஜோதியெனப் பாராட்டெடுக்கப்படுகிறது, சர்வ தேசங்களிலும் இந்தியாவின் அரசுப் பிரதிநிதிகள் சிறப்புடன் அமைந்துவிட்டனர்; வெளிநாடுகள் பலவற்றின் அரசுப் பிரதிநிதிகளும் இங்குவந்து அமர்ந்துவிட்டனர். அரசியல் துறையில் திருப்திகர மாறுதல்தான்; ஆனால், சமூகத்துறையில்—உள்நாட்டு நிலைமையில்—மக்களின் அன்றாட வாழ்வில் மாறுதல் என்ன கண்டோம்? முற்போக்குக்கு சாதகமான சமுதாய அங்கமாகத் திகழும் மக்கள் மனம் காலப்போக்கில் தானே மாறிவருவது இயல்பு, ஆனால் இந்து சமூகம் அப்படியல்லவே! தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீருக்கு, விஷவூற்றுக்கு ஒப்பானதாயிற்றே இந்து மதம். இந்து மதம் இங்கு நிலவிவரும் அன்று முதல் இன்றுவரை, அது மக்கள் சமூகத்தை இந்தந்த வழிகளில் கடைத்தேற்றிற்று என்று கூறமுடியுமா? ஆகவே, இந்நாட்டு அரசியல்வாதிகளின் (அடுத்த) வேலை இந்து மதத்தை திருத்தியமைப்பதே. திருத்தியமைப்பதென்றால், எப்படி? அதனை அழித்தொழித்து புதைத்து, அது அரசோச்சிய இடத்தில் மனிதனை மனிதன் கீழ்மைப்படுத்தாத பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்காத, நாகரிக முறையில் பிறழாத உன்னத சமுதாய அமைப்பொன்றை நிறுவுவதேயாகும்.

* * * *

## சகஜானந்த சாமியின் அறியாமை!

செப்டம்பர் மூன்றாவது வாரத்தில் சென்னை சட்டசபைக் கூடப்போகிறது. ஆங்கில ஏகாதிபத்தியம் மாறி, ஆரிய ஏகாதிபத்தியம தலி சுதந்திர ஆட்சி நடத்தப் போவதற்கான சட்டதிட்டங்கள் வகுக்கப்படப் போகின்

றன. இந்நாட்டுப் பழங்குடி மக்களை என்றென்றும் எல்லாத் துறையிலும் ஆழ்த்திவைத்து வருவதற்குத் தகுந்த அநாகரிக அக்கிரமச் சட்டங்கள் நிறுவப்படப் போகின்றன. மஞ்சள் நிற ஏகாதிபத்தியம் மேலும் பல்லாண்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளப்போகிறது.

சீர்திருத்த நந்தனைச் சுட்டுப்பொசுக்கிய ஆரியம் இன்று சகஜானந்தசாமியைத் தனது கையாளாகக் கொண்டிருக்கிறது. 'பொது இடங்களிலும் கல்விக்கூடங்களிலும் மதங்களைக் கண்டித்துப் பேசக்கூடாதெனத் தடை விதிக்கவேண்டும்' என்று சிதம்பரம் சகஜானந்த சாமி சட்டசபைக்கு மசோதாவொன்று கொண்டுவரப் போகிறதாம். "எனக்குள்ள 'வேசிமகன்' என்ற பட்டத்தைத்தப்பியத்தெறிய சூழ்ச்சி செய்யுமவருக்கும் வாய்ப்பூட்டுப்போடவேண்டும்" என்ற கருத்து தான் பிரதிபலிக்கிறது தனது மசோதாவில் என்பதை சாமி உணருமோ, உணராதோ? இந்துமதக் கோட்பாட்டை ஓரளவு உணர்ந்த கடுகத்தனை அறிவுபடைத்தாரும் இதனை உணர்ந்துக்கொள்வர். 'மிலேச்ச' ஆட்சி, சைவ ஆட்சி, வைணவ ஆட்சி, சைவம், வைணவம் இரண்டுக்கும் பொதுவான ஆஸ்திக ஆட்சி முதலிய பலவகை ஆட்சிக் காலங்களிலும் தனது அந்தஸ்தை, நிலையைப் பத்திரப் படுத்திக்கொள்ள. அவ்வப்போது ஆசிபீடத்திலமர்ந்திருப்போருக்கு ஏற்ப தனது காட்சியைத் திருத்திக்கொள்ள சகஜானந்தசாமி இந்துமதத்தைப் பயன் படுத்திக்கொண்டதே தவிர, இந்துமதத்தின் தத்துவந் தான் என்னவென்பது குறித்து அறியத் தொடங்கவில்லை போலும்! தன்னை இந்துமதத்தினன் என்று கூறிக் கொண்டு, தானொரு இந்து என்று சொல்லிக்கொள்ள சகஜானந்தசாமி முற்படுமேல், அதே நேரத்தில் அது "சூத்திரன், பஞ்சமன், சண்டாளன், வைப்பாட்டிமகன், விலக்குவாங்கப்பட்டவன், திருடன்" ஆகிவிடுவதை உணராதா என்ன? இவையனைத்தும் அதற்குத் தெரியும்! எனினும், என் செய்வது? கூட்டத்தில் 'கோவிந்தா' போட்டால்தானே, பஜனை முடிந்ததும் அவல்கடலை கிடைக்கும்!

ஊருக்கு ஒரு மைல் தொலேவில் சேற்றுக்கும் சக திக்கும், காட்டுக்கும் கரம்புக்குமிடையே, இடி, மின்னல், காற்று, மழை, வெயில் ஆகிய வற்றிலிருந்து எத் தகைய பாதுகாப்பையும் அளியாத ஓட்டை, உடைசல், உளுத்துப்போன ஓலைக் குடிசைகளில், ஒட்டிய வயி றுடனும் உடைந்த உள்ளத்துடனும் ஒரு கூட்டத்தை விட்டுவைத்துள்ளாரே ஒரு கடவுள், அக்கடவுளின் இலக்கணத்தை எடுத்தோதுகிறதே ஒரு மதம், அவற்றை உண்மையான கடவுள், உறுதி பயக்கும் மதம் என்று கருதுகிறதா சாமி? உண்மைக் கடவுளின் உள்ளபடியான இலக்கணத்தை ஒழுங்காகக் கூறத் தவறியதோடு, ஆபாசக் கடவுளரின அலங்கோல லட் சணங்களை அநாகரிக முறையில் கட்டிக்கூறும் ஒரு மதத்துக்கு, அதன் மேன்மைக்கு, வளர்ச்சிக்கு, ஆக்கந் தேடுகிறுரொருவரென்றல், அவரைப பற்றி என்ன நினைப்பது? தான் பிறந்து வளர்ந்த சமூகத்தின் தன் மானத்தைக் காட்டிக்கொடுக்குந் தரகர், கண்ணிருந்தும் கருத்திழந்த கபோதியென்றுதான் அறிவுலகம் கூறும்.

எந்தக் கடவுளரின் பெருமை குன்றும், சிறப்பு குறையுமெனக் கருதி நமது சாமி 'மதத்தைக் கண்டிப் போரைத் தடுக்க வேண்டும்' என்று சொல்கிறதோ, அந்தக் கடவுளரே அம்மதத்தில் படும்பாடு, அவர்கள் சுமந்து நிற்கும் இழிவு, யாருக்குந் தெரியாததா? மக் களை மடையராக்கும் அம்மதம், கடவுளரைக் கண்டித்து விட்டாலும் பாதகமில்லையே! ஆனல், கடவுளரை மனித ரினும் கடையினராக்கி, சின்ன பின்னம் செய்து சீர் குலைய வைத்து, நாகரிக நாட்டவரெவரும் கண்டு எள்ளி நகையாடும் வகையிலன்றோ சிருவடித்துவிட்டது! எந்தக் கடவுளரின் இருப்பினல் சாமி பெருமைப்படு கிறதோ, அந்தக் கடவுளரைப் பற்றி தவருகவன்றோ நிந்தனை செய்கிறது இந்துமதம்! சாதாரண கீழ்த்தர வகுப்புகளில் பயிலும் மாணவர்களும ஐய வினக்கள் அடுக்கடுக்காக கேட்கும் வகையிலனறோ எழுப்பப்பட் டுள்ளது கடவுள் எண்ணம் இவ்விந்து மதத்தில்.

"மனிதரைக்கடவுள படைத்தார்; கடவுளை யார் படைத்தார்?" என்று மாணவனெருவன் வகுப்பிலே

எழுந்து கேட்டால் என்னபதில் கூறுவது? 'பரம் பிதா வெனபோற்றப்படும் ஆண்டவன் மக்கள் சமுதாயத்தி லேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமையென்ற வேறுபாடுகளை உண்டாக்கு வானேன்?' என்ற கேள்விக்கு எதனைக் கூறி மாண வனைத் திருப்தி செய்வது? பெரிய புராணம் திருவிளை யாடற் புராணம் முதலிய பல்வேறு புராணங்களில் கூறப்படும் சிவனாரின் பண்புகளை அப்படியே ஏற்றுக் கொள்வதா? விண்டு புராணம கூறும் வரலாறுகளை உண்மையென ஏற்கலாமா? என்று மாணவர் மன மருண்டு கேட்பின், என்ன சொல்லித்தேற்றுவது அவரை?

இத்தகைய அறிவாராய்ச்சிக்குகந்த கேள்விகள் நாள்தோறும் நூற்றுக்கணக்கில் எழுப்பப்படுகின் றனவே மாகாணத்தின்பல பகுதிகளிலுமுள்ள கல்லூரி கள் பலவற்றிலும்! ஆசிரியரென, மாணவன் வழிகாட்டி, ஆசானென அமரும் எவரும் இக்கேள்விகளுக்கு ஏதா வது பதில் கூறித்தானே ஆகவேண்டும்? அப்படித்தரும் பதில் உளுத்துப்போன, இந்துமதத்துக்கு ஊறுவிளைப் பதாக இருந்தால் அதற்கு யார் பொறுப்பாளி? கால வேகத்துக்கு, கருத்துவளர்ச்சித்குத் தடைசெய்வதேயா கும் இம்மசோதா. கருத்து வளர்ச்சியை, சமுதாய முற் போக்கை விரும்பாதார் தான் இம்மசோதாவைக் கொண்டுவருவர்!

# சுயராஜ்யத்தில் சுயநிர்ணயம் பறிமுதல்!

காந்தியார் கனவுகண்ட ராமராஜ்யம் உருவாகித் தனது கோர விளைவை யளிக்க முற்பட்டு விட்டது. தோழர் எம். என். ராய் குறிப்பிடுவதுபோல "அரக்க தேவதை அரியணை ஏறிவிட்டது". எந்தெந்தபலியை எவ்வெவ்விதத்தில் கேட்குமோவென்று புரியவில்லை. டெல்லி இந்துஸ்தான் சர்க்காரின்போக்கு இந் நாட்டுத் தாழ்த்தப்பட்டோரையும், பிற்பட்ட வகுப்பின ரையும், இதர (பிற்பட்ட) சிறுபான்மையினரையும் எங்கு

கொண்டு சேர்க்குமோ தெரியவில்லை. பழங்குடிமக்களைப் படுபாதாளத்தில் ஆழ்த்திவைத்து, தன்னலமிக்கத் தான்தோன்றி யதேச்சாதிகாரக் கும்பல் ஆளும் வர்க்கமாக இருந்துவருவதற்கானத் திட்டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன. வகுக்கப்பட்டு, சட்டமான திட்டங்களிலொன்று இந்தியடொமினியனின் 'ஏகசக்ராதிபதி' சர்தார்பட்டேலின் மைனாரிட்டிகள் சம்பந்தமான அட்வைஸரிக்கமிட்டி அறிக்கை. சர்தாரின் அறிக்கையை, இந்தியடொமினியன் தலைவிதியை நிர்ணயித்துவரும் அரசியலமைப்புசபை ஏற்றுக்கொண்டது. இதன்படி, மாகாண, மத்ய கீழ் மேல்சட்டசபைகளுக்கான தேர்தல்களில் இனிதனித்தொகுதி முறை அனுசரிக்கப்படமாட்டாது. கூட்டுதொகுதிமுறை மூலமாகவே அபேட்சகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதாவது, மாகாண மத்ய சட்டசபைகளில் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக, சாதிமதஅகங்காரம் பிடித்த, நசுக்குண்டோரின் நலிவுதீர்ப்பதில் ஒருசிறிதும் அக்கரையில்லாத, அதேநேரத்தில் அவர்களை என்றும் அடிமைப்படுகுழியில் ஆழ்த்திவைத்து ஆதிக்கம்செலுத்தும் எண்ணம படைதத 'உயர்ஜாதிக்காரர்கள் அமரலாம்; அதற்கானமார்க்கம் வகுக்கப்பட்டிருக்கிறது இவ்வறிக்கையில். 7கோடிமக்கள் எழுச்சிபெற்று முன்னேறுவது, தீண்டாமைநெருங்காமைமுதல் சாபக்கேடுகளிலிருந்து விடுபடுவது, அவர்களது ஆசையும் ஆவலும் பூர்த்தியாவது இந்த உயர் ஜாதிக்கள் கையில் தானுள்ளது. தங்களோடு அன்றும் நெருங்கிப் பழகுப, தாங்கள் தினம் தினம் கண்டுபேசி குறைகளைத் தெரிவித்துவரும், தங்களது உண்மையான உரிமைகளையும் கோரிக்கைகளையும் விருப்பங்களையும் உள்ளபடி அறிந்து நிற்கும், தன்னலமற்றத் தங்கள் சேவகர்களை இந்நாட்டுத் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்பட்ட வகுப்பினர் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பி வைக்க இனி இயலாது. நியாயமான உரிமைகள் பல பெற்று, எல்லோரைப்போலவும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டிய ஒருபகுதி மக்கள்கூட்டத்தின் சுயநிர்ணயம் பறிக்கப்பட்டுவிட்டது.

சாதி, வகுப்பு வேறுபாடுகளையொழிக்கவே இவ் வேற்பாடு என்று கூறப்படுகிறது. இந்நாட்டு நிலையை நன்குணர்ந்த, சாதாரண அரசியல்வாதியும் கூறுவார், இது சாதி வகுப்பு வேறுபாடுகளை நிரந்தரமாக நிலைக்க வைக்கச்செய்யப்படும் சதிவேலையென்று. சண்பகநல்லூர் சேரி சாம்பனுக்கு அவ்வூர் அக்கிரகாரத்து அருணசல அய்யரோ, மேலத்தெரு தொண்டைமண்டல முதலியாரோ, வடக்குத்தெரு கார்காத்த வேளாளரோ பிரதிநிதியாக வந்து சட்டசபையிலமருவதால் சாதி, வகுப்பு வேறுபாடுகள் தொலைந்துவிடுமா? இன்றைய சமுதாய அமைப்பில் இப்பிரதிநிதிகள் உள்ளபடியே தாழ்த்தப்பட்டோரின் கோரிக்கைகளைப் பிரதிபலிப்பார்களா? தாழ்த்தப்பட்டோருக்கு சட்டரீதியாக உரிமைகள் பெற்றுக்கொடுக்க இவர்கள் மனம் இடங்கொடுக்குமா? இந்நாட்டு சமுதாய அமைப்பு அத்தகைய பரிபக்குவ நிலையை அடைந்துவிட்டதா?

சாதி, வகுப்புகளையொழிக்க இதுவல்ல வழி. சாதியென்பது சொல்லளவில் ஒழிந்தால்போதாது; அப்படி ஒழிவதால் இதுவரை பயனபெற்றுவந்த சாதி தான் வளம்பெற மேலும் வழியேற்படும். எனவே, கீழ்சாதி, மேல்சாதியென்ற எண்ணம் இருசாதியாருள்ளத்திலிருந்தும் ஒழிக்கப்படவேண்டும். வடதுருவம், தென் துருவம் போன்று அகன்று, பிரிந்துநிற்கும் இருமனப்பான்மைகளும் ஒன்றிஇணைய வழிவகைகளெடுக்கவேண்டும். சமூகத்தைத் தலைகீழாகத்திருத்தியமைக்கவேண்டும். அழிவுவேலைக்கு ஆயத்தமாகவேண்டும்; ஏன்? இந்நாட்டுப் பெருவாரி மக்கள் மீது இருந்துவரும் இழிவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

## சமூகப் படங்களுக்குத் தடை!

"பரிதாபத்துக் குரிய சென்னை மாகாணமே! இனம் மொழி கலை உணர்ச்சியற்று நிற்கும் சென்னை மாகாணமே! அறிவொளி சுடரிடவேண்டிய சகாப்தத்திலும் இருட்டறையில் சிக்கி திக்குமுக்காடும் சென்னை மாகாணமே! புத்துணர்ச்சிபாவி, புதுவுலகம் சிருஷ்டி

மாகும் நேரத்திலும், பழைமை மோகங்கொண்டலேயும் சென்னைமாகாணமே! உனக்கு என்றும் நற்காலம் இல்லையா? உனக்கு எதிர்காலமே கிடையாதா?'' என்று கூறி மனமுடைந்து பெருமூச்சுவிட்டு மூலையில மாந்துவிடும் வகையில் தானுள்ளது இம்மாகாணத்தின் நிலை. நாளுக்குநாள் எடுப்பார்கைபபிள்ளையாய் ஆகிவருகிறது திராவிடம். என்செய்வது?

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்து, சுதந்தரம் கிடைத்துவிட்டது. சீர்திருத்தத்துக்கு எங்கும் தடை — பொதுமேடைகளில், பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் போதாமைக்கு சினிமாப்படங்களிலும் சீர்திருத்தத்துக்குத்தடை! நாட்டு மக்களை ஆயிரமாயிரமாண்டுகளாக மீளா மௌட்டிகதில் ஆழ்த்திவரும் நாசகார சமூக ஆபாசமத புராணங்களை, அக்கிரம மதக்குருமாரை, மூட மதச்சடங்குகளை, கேலியோ, கிண்டலோ, விகடமோ செய்தல் கூடாதாம் திரைப்படங்களில்! அப்படி செய்வதால் மதத்தின்மீது மரியாதைக் குறைவு ஏற்பட்டுவிடுமாம்! இத்தகையபிற்போக்குத் திட்டமொன்றை சினிமாப்படத் தணிக்கை போர்டு ஆலோசித்து வருகிறதாம். இத்திட்டத்தை சட்டமாக்க விரைவில் சர்க்கார் முயற்சி எடுப்பராம்! ஏன்? எப்படியிருக்கிறது? 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்றபுலவன் வாழ்ந்த நாட்டில், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்று பிரகடனம்செய்த வள்ளுவன் வாழ்ந்த நாட்டில், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று வரையறுத்த திருமூலர் வாழ்ந்த நாட்டில், 'கண்மூடிப்பழக்கமெலாம் மண்மூடிபோக' என்று கடுமொழி வழங்கிய ராமலிங்கனுர் வாழ்ந்த நாட்டில், சீர்திருத்த செம்மல் பெரியார் ராமசாமி திக்கெட்டும் பகுத்தறிவு பாய்ச்சிவரும் நாட்டில், மூடப் பழக்கவழக்கங்களை, மதிகெட்ட மனப்பான்மையை, இழிவுதரும் எண்ணங்களை முறியடிக்கும் சமூக சீரமைப்புத் திரைப்படங்களுக்கா தடை? இது முறையா? நியாயமா? அறிவுடைமையா? சர்க்கார் என்ன செய்யப்போகிறது?

—:0:—

# அவர்கள் கதி.....?

சோலை.

அதோ பாருங்கள்! அங்கு மேளக் கச்சேரி நடக்கிறது. அது எவ்வளவு இன்பமாக இருக்கிறது உங்களுக்கு. அவன் எவ்வளவு பாடுபட்டு உங்களுக்கு அந்த ஒலியை எழுப்புகிறான். அந்தப் பந்தலைப் பாருங்கள். அதன் வாயிலில் குலைத் தள்ளிய வாழை மரம் கட்டியுள்ளார்கள். அது எதற்குத் தெரியுமா? திருமணம் நடந்த அந்த மணமக்கள் வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதற்காக. அங்கு எவ்வளவுபேர் குதூகலமாக அந்த இன்பத் திருமண நேரத்தைக் கழிக்கிறார்கள். ஆனால் அந்த திருமண வீட்டிற்கு எதிர் வீட்டில் வாழும், இல்லை வதைபடும் நான்? அவர்கள் எதற்காக இன்பம் அடைகிறார்களோ அதுவே எனக்கு இன்னலை அளிக்கிறது. அவர்கள் எதை ஆர்வத்துடன நடத்த ஆவல் கொண்டு நடத்தினரோ, அதுவே எனக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணுகிறது — ஏன்?-- யாருக்குத் திருமணம்? என் காதலுக்கு, கருத்துக்கு, அன்புக்கு, ஆசைக்கு இலக்கான குஞ்சிதத்திற்கு. பெயரைக் கூறக்கூட கூசுகிறது. யாருடைய அன்பு அணைப்பிலே இவ்வுலகத்தையே மறந்து அன்று அடிமைப் பட்டேனோ, அந்தக் குஞ்சிதத்திற்கு என வீட்டின் எதிர்வீட்டிலே, என் எதிரிலேயே திருமணம். அதோ அங்கு பாருங்கள். என்னைக் கண்டும் காணாதது போல் தலை குனிந்து கொண்டு செல்லும் குஞ்சிதத்தை. பசப்பு வார்த்தைப் பேசி என்னை மசக்கையாக்கிய குஞ்சிதத்தை; பால்மொழி பேசி என்னைப் பாவியாக்கிய அந்தக் குஞ்சிதத்தை; என்னை விபசாரியாக்கிய அந்த வீணனைப் பாருங்கள். கொஞ்சு மொழி பேசிய அந்தக் கொடுமையாளனைப் பாருங்கள். அவன் முகத்தைப் பாருங்கள்! எவ்வளவு அழகாக இருக்கிறது! இருந்தும் பண்பு இல்லையே சொன்ன சொல்லை|கொடுத்த வாக்கை, நிறைவேற்ற அருகதையற்ற அந்த

அழகிய வாலிபனைப் பார்க்க என் நெஞ்சு வெடிக்கிறது; என் உள்ளம் உறைகிறது. இருக்கட்டும் என் உண்மை வரலாற்றை கூறுகிறேன். குற்றவாளி யார்? என்று நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே வீட்டிலே அதோ அலங்கரித்து இருக்கிறார்களே அதைப் போல அதைவிட அதிகமாகக் கூட அலங்கரித்து இருந்தார்கள். அப்போது எனக்கு வயது பதினெட்டு. முகரா அரும்பு நான் அப்போது. அன்று எனக்குத் திருமணம். என் அப்பாவின் அன்புக் கரம்கூட என்மேல் பட்டதில்லை, அப்படிப்பட்ட என்னுடைய கரத்தை, என் கணவர் காதல் கரம் கொண்டு பிடித்தார். அப்போது என்னுடல் சிலிர்த்தது. என் உணர்வு வான வெளியிலே வட்டமிட்டது. அன்று அவர் என் கழுத்தில் பொன்னாண் மாட்டினார். நான் அவரை அதற்கு முன் பார்த்ததில்லை. இருந்தாலும் அவர் மேல் எனக்கு அன்பு ஏற்பட்டது அவர் கண்களில் கனிவு கண்டேன். பேச்சில் பண்பு கேட்டேன்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். பொதுவாக, திருமணத்தை முதல் நோக்காகக்கொண்டு. எங்களுக்கு கணவன் மனைவியாகிய எங்களுக்கும் அந்த ஆண்டிலே வழி பிறக்க ஏற்பாடு செய்தார்கள். என்ன ஏற்பாடு? நானும் என் கணவரும் தனிமையில் தைமீ— அது தான் இரண்டு ஆண்டுக்கு முன்பு—25ம் நாள் இரவு சந்திக்க வேண்டும் என்று. அதைக் கூறியவுடன் என்னுள்ளத்தில் ஓர் பரபரப்பு,— ஓர் எழுச்சி—ஓர் பயம் எல்லாம் உண்டாயிற்று. திருமணத்தின் முதல் நோக்கத்தை(!) நிறைவேற்ற எங்கள் பெற்றோர்கள் நாள் பார்த்து ஏற்பாடு செய்திருந்தனர். அவரைத் தனிமையிலே கண்டு என்ன பேசுவது. என்ன கேட்பது என்றெல்லாம் திட்டம் போட்டு வைத்திருந்தேன். என் தோழிகளெல்லாம்—நான்கு ஐந்து பிள்ளைகளைப் பெற்றவர்கள்கூட என்னை அப்போது கேலி செய்தார்கள். நான் அந்தக் கேலியை— சிரித்துக்கொண்டே மகிழ்வோடு ஏற்றுக் கொண்டேன்—......ஆனால்.......,... அந்த நாளுக்கு ஏழுநாட்

களுக்கு முன்பு ஒரு நாள். என் கணவர் வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தார். அவர் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. குடிகாரன் கண்களை விட சிவப்பாக இருந்தன. ஒரு சமயம் குடிக்கப் பழகிக் கொண்டாரோ என்று கூட பயந்துவிட்டேன். அவர் தள்ளாடிக்கொண்டே வந்து கட்டிலில் படுத்தார். அவர் ஐயேர — அம்மா என்று முணகிக்கொண்டே இருந்தார். நான் மனைவி என்ற உரிமை பெற்றிருந்தாலும் நெருங்கவில்லை. நெருங்கக் கூடாது - ஏன்? - அவ்வளவு உரிமை அப்போது எங்களுக்கு அளிக்கப்படவில்லை. அவருக்கு உடம்பு காய்ச்சல் அடிக்கிறது என்று அங்கிருந்தவர்கள் பேசியதில் இருந்து தெரிந்து கொண்டேன். நான் உள்ளத்தின் உள்ளே, உறக்கத்திலே, விழிப்பிலே அழுதேன் அடுத்தநாள் காலை நான் அவரைப் பார்த்தபோது பயமாக இருந்தது. நடுக்கம் ஏற்பட்டது. அவர் முகத்தில் பால் வழியும் வதனத்தில் கொப்பளங்கள் இருந்தன அவருக்குப் பெரிய அம்மை வார்த்து இருந்தது. அடுத்த நாள் உடல் பூராவும் பெரிய அம்மை— என் வாழ்க்கைப் படகின் வழியிலே பெரிய பாராங்கல்-நான் அழுதேன் —அலறினேன். என்னைத் தேற்றுவாரில்லை —ஆறுதல் கூறுவாரில்லை — கடைசியில் என்ன ஆயிற்று— நானும் அவரும் எந்த நன்னாளிலே தனிமையில் சந்திக்க ஏற்பாடு செய்திருந்ததோ அன்று அவர் ஆவி பிரிந்தது என் வாழ்வு என்னை விட்டுப்பிரிந்தது— என் இன்பம் என்னை விட்டுப் பிரிந்தது—என் உயிருக்கு உற்ற துணை என்னை விட்டுப பிரிந்தது எந்த அன்புக் கணவரின் அன்பணைப்பிலே ஆறுதல் கொண்டு வாழ்வு நடத்தலாம் என்று ஆசை கொண்டிருந்தேனோ அவர் மாண்டுவிட்டார்.


விதவை... நான் ஒரு விதவை சமூகம் எனக்கு சூட்டிய பெயர் விதவை. வாழ்விழந்து இன்பம் இழந்து உடல் மெலிந்து, உள்ளம் வெந்து, தாலியை இழந்து இருக்கும் எனக்கு சமுதாயம் விதவை என்ற பட்டமளித்து ஒதுக்கி விட்டது. என் மாமனும் மாமியாரும் அவர் சுற்றத்தாரில் பெரும்பாலோரும் கூறினார்கள் நான் அவர்கள் வீட்

டிற்கு மருமகளாக வந்ததினால்தான் அவர் இறந்து விட்டார் என்று. அவர் இறந்து விட்டதால் அவர்களுக்கு அதிக நஷ்டமாம் அவரைக் கொல்ல வந்த எமனும் நான். ஏன்? நீங்களே கூறுங்கள். அவரால் அவர்கள் ஆயிரம் பெற்று வாழ்ந்திருக்கக்கூடும் அவர் இறந்ததால் யாருக்கு அதிக இன்னல் துன்பம்? எனக்கா? அவர்களுக்கா? பதினெட்டாம் வயதில் கணவனை இழந்து கதியற்று கிடக்கும் எனக்கா? நாற்பத்தைந்தாவது வயதில் கூட பிள்ளைப் பெறும் பேற்றைப்படைத்திருக்கும் அவர்களுக்கா? எனக்கு மணமாகி மங்கையாகிவிட்டேன். இருந்தாலும் நான் கன்னியாகவே இருந்தேன். நான் ஓர் கைம்மைக் கண்ணி. என் உணர்வு உச்ச நிலையை அடையும்படி செய்து விட்டு அவர் மீளா உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். நான் என்னால் ஆனவரை சமூகம் கற்பிக்கும் கற்பைக் காப்பாற்றி வந்தேன். என்னால் முடியும் வரை, என்னால் பொறுக்க இயலும் அளவு நான் சமூகம் நினைக்கும் ஒழுக்கத்தை காப்பாற்றி வந்தேன். அப்போதுதான் குஞ்சிதம் குறும்புக்கார வாலிபனாக மாறியது. அவர் பார்வை என் உடைந்த உள்ளத்தில் உறைந்து கிடந்த உணர்வை உருக்கி விட்டது நான் என்னையறியாமலே அடிக்கடி அவர் கண்ணில் பட ஆரம்பித்தேன். என்னுள்ளம எதையோ விரும்பிற்று; நான் அவர் வலையில் வீழ்ந்தேன். எங்களுக்குள் கூடாதப் போக்கு வரத்தும் நிகழ்ந்தது. அவரை நான் தனிமையில் சந்திக்க ஏற்பாடு செய்தார் ஆனால் நான் அவர் அன்று அப்படி நடந்து கொள்வார் என நினைக்கவில்லை. நான் அந்நாள் வரைப் போற்றி காப்பாற்றி வந்த கற்பை இழந்து விட்டேன். அவர் என் கற்பைக் கெடுத்தார் என்பதற்கு இப்போது என்னிடம் எவ்வளவோ ஆதாரம் இருக்கின்றன இருந்தும் பயன்? அவர் மணத்தைக்கலைக்கமுடியுமா? அவர் ஆண் எத்தனைப் பெண்களை கெடுத்தாலும் அவர் வாழ்வு வீழப்போவதில்லை நான் விதவை; அது மட்டிலுமல்ல விபசாரி நான் விதவையாய் இருந்ததால் விபசாரி ஆனேன். நான் விபசாரியாகிவிட்டேன் நான் இப்போது ஆறுமாதம். நான்

விதவையாய் இருந்தபோது என் மாமனார் வீட்டில் அளித்த ஜீவனாம்சம் நான் விபசாரி ஆகிவிட்டதால், இல்லை வழுக்கி விழுந்ததால் நான் வாழவழியில்லை. உலகத்தில் பிறந்த ஒவ்வொரு உயிரும் அடையும் இன்பத்தை நான் ஒருதரம் பெற்றதால் ஒதுக்கி வைக்கப்பட்டேன். நான் இன்றியமையாத, தடுக்க முடியாத இன்பத்தைப்பெற்றதால் வாழ வழியில்லை. குலத்தைக்கெடுக்க வந்த கோடரிக்காம்பு நான். சமூகம் என்னைப் பார்க்கும் பார்வை என்னைப்பற்றி பேசும் பேச்சுகள் எவை என்பது எனக்குத் தெரியும். சில சமயங்களில் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று எண்ணிமுயன்றிருக்கிறேன். ஆனால் முடியவில்லை. நான் பெறப்போகும் பிள்ளையைப் பார்க்க எனக்கோர் ஆசை தோன்றிற்று. வெறுப்பின் நடுவிலே ஓர் ஆவல் தோன்றிற்று. அதற்காக நான் இப்போது உயிர் வாழ்கிறேன் என் பெற்றோர்கள் என் மீது வெறுப்பு கொண்டிருந்தாலும் அதை அவர்கள் எனக்குத் தெரியும்படி நடத்தவில்லை பிள்ளைக்காக வாழ்கிறேன். என்னைக் கெடுத்து அதோ வாழப் போகிறாரே அவருக்கும் எனக்கும் பிறக்கபபோகும் குழந்தையை எனக்குப் பார்க்க ஆவலாக இருக்கிறது. அதற்காக வாழ்கிறேன். என்னை ஏமாற்றிய அவர் வாழட்டும். நீடூழி வாழட்டும். என்னை மணந்து கொள்ள முடியாததற்கு அவர் கூறியகாரணம் சமூகம் அவரை ஒதுக்கிவிடுமாம். சாதிக்கட்டுப்பாடு செய்துவிடுவார்களாம். என் கற்பை அழித்தது குற்றமில்லை. என்னை மணந்து கொள்வது குற்றம். அப்படித்தானே? நீங்கள் கூறுங்கள்

* * * *

நான் குஞ்சிதத்தின் திருமணத்திற்குச் சென்றிருந்தபோது அந்தப்பெண் மேலே கூறிய வரலாற்றைக் கூறினாள். அதைக் கேட்பதற்கு எனக்கு வருத்தமாகத்தான் இருந்தது. நான் என்னசெய்வது? வருத்தபட முடியும்.வேண்டுமானால் அழ முடியும் அதை தவிர நான என்ன செய்ய முடியும், யார் குற்றவாளி என்று என்னால் இந்த இழிந்த சமூகத்தில் வாழ்ந்து கொண்டு தீர்ப்பளிக்கமுடியவில்லை. ஆனால் ஒன்று உண்மை. உறுதியுங்



# பொது அறிவு பெற...

ஜர்மன் வெள்ளி யென்று வழங்கப்படும உலோகத்தில் ஒரு சிறிது கூட வெள்ளியே கிடையாது.

---

கூட. இந்த இழிந்த கொள்கைகளும் கோட்பாடுகளும் கொண்ட சமூகம் மன்னிக்க முடியாத குற்றவாளி. சமூகத்தைத் திருத்த முற்பட ஆவல் கொண்டேன்.

பிற்க சில திங்கள் கழித்து அவள் ஊருக்கு வந்தபோது அப் பெண்ணைப்பற்றி விசாரித்ததில் பிரசவ இன்னலால் உயிர் நீத்தாள், என்றும் தாய் இன்மையால சேயும் இறந்தது என்றும் சொன்னார்கள் விதவையாகி விபசாரி ஆன அவள் ஏதோ ஒரு விதத்தினால் இந்த சமூகத்தைவிட்டுப் போய் விட்டாள். அவளைப் போல் எத்தனையோ பேர் இந்த சமூகத்தில். அவர்கள் கதி...?

அழிவு வேலை ஆக்கவேலை இரண்டுக்கும் பயன்படுவது சுத்தி யென்ற ஆயுதம். அதனால்தான், அது சோவியத் கொடியில் இடம் பெற்றுள்ளது.

* * *

ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்பு பெற்ற உயர்ந்த நகைகளில் நின்று ஒளிவீசும் வைரக்கற்களை 10 விநாடிநேரம் அனலில் காட்டினால் காலணா பெறாத கரியாகிவிடும்.

* * *

உலக மக்களின் ஓராண்டு தேவைக்கு 2 கோடி டன் உப்பு தேவைப்படுகிறது. இந்தியாவில் ஓராண்டில் 15 லட்சம் டன் உப்பு உற்பத்தியாகிறது.

* * *

மக்கள் வோட்டெடுப்பு முறை முதன் முதலாக இங்கிலாந்தில் 1870-ல் அரசியல் தேர்தல்களின் போது கையாளப்பட்டது.

இந்தியாவின் எதிர் காலத்தை நிர்ணயிக்கவந்து சென்ற பிரிட்டிஷ் தூது கோஷ்டியினரின் வழிநடைப் பயணத்துக்குப் பிடித்த செலவு முப்பத்தோரா யிரத்து இருநூற்றைம்பது பவுன்.

* * *

லண்டனில் மணியொன்றுக்கு 1,20,00,000 காலன் தண்ணீருக்கு மேல் செலவிடப்படுகிறது.

* * *

குதிரைகளுக்கு லாடம் அடிக்கும் பழக்கம் 1065—ம் ஆண்டிலிருந்தே நிலைபெற்று வருகிறது.

* * *

சமதர்மக் கொள்கையை முதன் முதலில் எடுத்து மொழிந்தவர் செயின்ட சைமன் (1760-1825) என்பவரா வார். காரல் மார்க்ஸ் முதலாளித்துவத்தின் கேடுகளைப் பரிசிலனை செய்து, சமதர்மக் கொள்கையைப் பரப்பினர்.

* * *

ஒன்றுக்கும் உதவாது என்று இதுவரையில் வீணுக்கி வரப்பட்ட நாவற்பழக் கொட்டையில் புரதசத்து கனிசமான அளவு இருப்பதாகவும் அதைக் கால் நடைத் தீவனமாகப் பயன்படுத்தலாம் என்பதாகவும் நாவற்பழக் கொட்டை சம்பந்தமாய் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது. கோதுமை வைக்கோலையும் கடுகுப்பிண்ணுக்கும் நாவற்பழக்கொட்டையும் சம பாகமாகச் சேர்த்து செறிந்த கலவைத் தீனியையும் போட்டு வளர்ந்த பிராணிகளின் தேக எடை 30 வாரங்கொண்ட கால அளவில் சராசரி 32 பவுண்டு கூடி அவை வளர்ச்சியுற்றதாகத் தெரிய வந்திருக்கிறது.

* * *

உலகில் வழங்கும் பல வகை மொழிகளும் நான்கே குடும்ப மொழிகளாகப் பிரிக்கப் பட்டு விட்டன. அந்நான்கிலொன்று திராவிடக்குடும்ப மொழிகள். தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம் முதலியவை இத் திராவிடக் குடும்பத்திலடங்கும்.

* * *

உலக ஆதிமக்கள் தமிழரே- திராவிடரே-என்ற உண்மையை மறுக்கவோ மாற்றவோ கூடிய ஆதாரம் இதுவரையில் கிடைத்திலது.

# ஐயங்கள்

[தங்களுக்கெழும் அறிவாராய்ச்சிக்குப் பொருத்தமான ஐயப்பாடுகளை, அன்பர்கள் நிலவுக்கு எழுதித் தீர்த்துக்கொள்ளலாம்.]

1. நம் நாட்டு ஆடவர் பெண்டிர் மேல் நாட்டு உடுப்பு முறையைப் பின்பற்றுதல் நல்லதா?

[சிவம், திருச்சி]

பதில்: உடுப்பு முறையென்பது அந்தந்த நாட்டு தட்ப வெப்ப நிலையினையும், வசதி நாகரிக முறைகளையும் பொறுத்ததாகும். ஒரு நாட்டின் இயற்கையமைப்புக்கேற்ப, அந்நாட்டுக்கான உடுப்பு முறையும் இயல்பாக அமைந்து விடுவதுண்டு. தங்கள் நாட்டு சூழ்நிலை, சுற்றுச் சார்புக்கு இம்முறைதான் ஏற்றதெனப் பெருவாரி மக்கள் மேற்கொள்ளும் உடைகளே அன்னவர் நாட்டின் உடுப்புமுறை ஜாபிதாவில் இடம் பெறுகின்றன. இப்படி இயல்பின் அமையும் உடை முறையை அந்நாட்டு மக்கள் தங்கள் சௌகரியத்துக் கேற்பவும், அறிவு முதிர்ச்சிக்கொப்பவும் திருத்திக் கொள்கின்றனர். எனவே மேல்நாட்டு உடைகள் பார்வைக்கு நன்றாயிருக்கின்றனவென்பதற்காக, நாம் அவைகளை சௌகரியக் குறைவோடு உடுத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதே போல, நம் நாட்டு உடைமுறை பழக்கத்தில் வந்து விட்டதெனக் கருதி, சௌகரியத்திற்கேற்ப திருத்தியமைத்துக் கொள்ளா திருப்பதும் தவறாகும். எதுஎப்படி போயினும் நம் நாட்டுப்பெண்டிர் உடுப்பு முறையில் தீவிரத் திருத்த முறை வேண்டும். 18, 16, 12 முழச் சேலைகளிடை சிக்கிக்கொண்டு, அவர்கள் தொல்லை பல அனுபவிக்கிறார்கள்.

* * *

2. சோவியத், போல்ஷ்விக் மென்ஷ்விக் என்ற சொற்களின் பொருளென்ன?

[கே. பி., தில்லை]

பதில்: சோவியத் சமதர்மக் குடியரசு யூனியனைச் சேர்ந்த ஒவ்வொரு மாவட்டத்தினுடையவும் தொழிலாளரும் வீரர்களும் தேர்ந்தெடுக்கும் கவுன்சிலுக்கு "சோவியத்" என்று பெயர். 'போல்ஷ்விக்' என்பது மெஜாரிட்டி (பொதுமக்கள் — உழைப்பாளிகள்) கட்சி. 'மென்ஷ்விக்' என்பது மைனாரிட்டி கட்சி, மிதவாதக் கட்சியெனக் கூறலாம்.

* * *

3. சிலரின் கைவிரல் நகங்களில் வெண்மை நிறப்புள்ளிகள் காணப் படுகின்றனவே, காரணமென்ன?

[கோவிந்தன், ஆற்றூர்]

பதில்: நகத்தில் காணப்படும் வெண்மைநிறப்புள்ளிக்குக் காரணம் பலமின்மையும் கெட்ட இரத்தமுமேயாகும். நகங்களை வளரச் செய்யும் உயிரணு அறைகள் சரியான முறையில் வேலை செய்வதில்லை.

* * *

4. 'கலப்பு மணம்' பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

[முருகன், தில்லை]

பதில்: ஜாதி, மத, உடல் கலப்புகளைக் காட்டிலும் உள்ளக் கலப்பு இன்றியமையாததென்ற கருத்துடையோன் யான். கலப்பு மணங்களனைத்தும் காதல் மணங்களாகவே இருந்தால், பொன்னாலாகிய மலர் வாசனையும் பெற்றுத் திகழ்வதற்கு ஒப்பாகும். தனது லட்சியம் நிறைவேற வேண்டுமென்பதற்காக, தானொரு தீவிர சீர்திருத்தவாதியெனப் போற்றப்படுவதற்காக, கலப்பு மணமே செய்து தீருவதென்ற பிரதிக்ஞையை மேற்கொண்டு மனமொன்றியோ, ஒவ்வாமலோ செய்து கொள்ளப்படும் கலப்பு மணத்தை அறிவுலகம் ஏற்காது? கடவுள், மத, மோட்ச, நரக மூடப்பழக்கவழக்கங்களுக்கு அடிமைகளாகி விட்ட பெருவாரி மக்கள் வதியும் இந்நாட்டில், அவர்கள் பரந்த உள்ளம் பெற்று ஒளியெய்த ஒரு நூற்றாண்டுக்காகிலும் "எவரும் தான்பிறந்த ஜாதியில் பெண் கொள்ளவோ கொடுக்கவோ கூடாது" என்ற சர்க்கார்சட்டம் அமுலில் இருக்குமேயாகில், வர்ணாஸ்ரம முறை மண்ணோடு மண்ணாய் மறைந்து போக வாய்ப்பிருக்கிறது.

* * *

5. தமிழ்நாடு காங்கிரசின் எதிர்காலம் எவ்விதம் அமையுமெனத் தாங்கள் கூறமுடியுமா?

['ராம்ரஹீம்', சென்னை]

# ஏன் திராவிடரென்கிறோம்?

[1945-ல் பெரியார்]

நாற்பத்து நான்கு கோடி இந்தியர்களுக்குள் நாமும் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, நாம் இந்தியர் என்னும் உரிமை கொண்டாடினோமேயானால், பல துறையிலும் மற்ற மாகாண மக்களோடு வேறுபட்டுப் பின்னணியில் இருக்கும் நாம் இந்தியரில் ஒரு மைனாரிட்டி, சிறுபான்மைக் கூட்ட சமுதாயமாக ஆகிவிடுகிறோம்.

அது தவிர, நாம் நம்மை இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுவோமேயானால், இந்து சமயத்தின் வருணாச்சிரமதர்ம முறைப்படி: அதாவது பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்கிற 5 பிரிவுகளில் நாம் 4-வது 5வது பிரிவுகளுக்கு ஆளாகி, மிகுதியும் தாழ்மையும், இழிவும் இருக்கிற ஈன மக்களாக ஆகிவிடுகிறோம். இவை சட்டப்படியும், சமயப்படியும், சாஸ்திரப்படியும், அமுலில் இருந்து வரும் நடவடிக்கை கிரமப்படியும் நம்மைச் செய்து விடுகின்றன என்பதோடு இதை நாமே மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு, ஏற்றுக் கொண்டவர்களாகவும் சகித்துக்கொண்டும் இருப்பவர்களாகவும் ஆக்கிவிடுகின்றன,

அதுபோலவேதான் நாம் நம்மைப் பாரதியர், பாரத புத்திரர் என்று சொல்லிக் கொள்ளுவோமானால், இந்தியாவின் மொத்த பரப்பில் 4-ல் 5-ல் ஒரு பங்கு பரப்புள்ள பகுதியைச் சேர்ந்த நாம், இந்தியாவின் சரி பகுதிக்கு மேற்பட்ட துறைமுகங்களைச் சேர்ந்த நாம், நம்நாட்டைப் பற்றிய அதன் குறைகள் சுரண்டுதல் பற்றிய கவலை ஏற்படமுடியா

---

பதில்: வடநாட்டுக்கு வால் பிடிக்கும் தன்மை இராதென்றே பெரிதும் நம்பப்படுகிறது. பெருவாரிமக்களுக்கு அதிகபட்ச நன்மை' யென்ற கொள்கையை அனுசரித்து, தான் ஆட்சியிலிருத்தும் சர்க்காரை உண்மையான மக்கள் சர்க்காராக்கப் பாடுபடுவது தவிர, அதற்குவேறு வேலையில்லையென்பதை அந்த ஸ்தாபனமே உணர வேண்டும்.

தவர்களாக ஆகி, மற்ற மாகாணக்காரர்கள் கொள்ளைக் கூட்டத்தார் போல் வந்து சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி சொத்துக்களை சுரண்டிக் கொள்ளை கொண்டு போவதைப்பற்றியும் கவலை ஏற்படமுடியாதவர்களாக ஆகி விடுவதோடு, ஒரு சமயம் கவலை ஏற்பட்டாலும் கூட அதற்கு நம் எதிரிகளால் துவேஷ உணர்ச்சி என்று பேர் வைக்கப்பட்டு, "தேசபக்த" க்கூட்டத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு விடுகிறோம். எப்படியெனில், இப்போது நாம் சமுதாயத்தில் கீழ்ப் படுத்தப் பட்டவர்களாயிருந்து, பழக்கம், வழக்கம் உரிமை, சலுகை ஆகியவைகளில் வேறுபட்டிருந்து கொண்டு தாழ்ந்த நிலையில் இருத்தப் பட்டு இருப்பதை மாற்றிக் கொள்ளுவதற்காக என்றே கவலை கொண்டு, நம் சமுதாயத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டு நாம் செய்யும் முயற்சிக்கு இன்று வகுப்புத்துவேஷக்கூட்டம் என்று பெயர் ஆகி தேசியத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்கின்றபெயர் இடப்பட்டு, எப்படி அது சர்க்காராலும் அனுமதிக்கப் பட்டுவிட்டதோ, அதுபோல் நாம் இந்தியர், பாரதியர், இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு திராவிட நாட்டுப் பாதுகாப்பை, நலனைப்பற்றி சிந்தித்தால், கண்டிப்பாக அது தேசத் துவேஷம், நாட்டுத் துவேஷம் கொண்ட கட்சி என்று பழிச்சொல்லப்பட்டு விடும் என்பதோடு நாமும் அலக்ஷியப்படுத்தப்பட்டவர்களாக ஆகிவிடுவோம் என்பதில் ஐயமில்லை.

ஆகையினாலேயே தான் சென்னைமாகாணத் திராவிட மக்களாகிய நாம் அந்த மூன்று பெயர்களையும் நீக்கிவிட்டு நமக்குத் திராவிடர், திராவிடநாட்டவர், திராவிட சமயத்தவர் என்று சொல்லத் தீர்மானித்துக் கொண்டிருப்பதோடு, இந்தப்படியான திராவிட நாட்டை சற்றேறக் குறைய மைசூர், திருவாங்கூர் முதலிய சுதேச சமஸ்தானங்கள் போன்று அதாவது இந்திய மத்திய அரசாங்கத்தின்—கவர்னர்-ஜனரல் என்வரின் ஆதிக்கத்தில், ஆட்சியில் இல்லாமல் தனி நாடாக சுதந்திரமுள்ள ஆட்சிநாடாக ஆக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக் கொண்டு இருக்கிறோம்.

ஒரு மறுமலர்ச்சி நாடகம்

# முல்லையின் முறிந்த காதல்

தில்லை - பொன்னப்பா

## முதற் காட்சி

நேரம் - மாலை

இடம் - கதலியும், கரும்பும் அடர்ந்த கழனி களுக்கிடையே நீர் நிறைந்த கன்னி ஓரம், முல்லை பச்சிலை பறிக்கவருகிருள். காவல் காத்தான் சந்திக்கிருன்

காத்தான் - யாரது ?

முல்லை - எங்கே தாத்தா !

காத்தான் - ஓகோ நீயா ஆயி! எங்க முடிகொண்டான் ஆத்தாவூட்டு முல்லை இல்லே! பாவம் தொகப்பனத்த பொண்ணு! ம்... அதிருக் கட்டும், வயிசி பொண்ணுநீ, இந்த மாலை மசங்கன வேளேயிலே இங்க எங்காயிவந்தே?

முல்லை - எங்கம்மாவுக்கு உடம்புக்கு முடியலே. ஒரு பச்சிலை வேண்டும், இந்தக் கன்னியிலே கொத்துக் கொத்தாயிருக்கும் பார்த்து கொண்டுவா ' என்று சொன்ளுங்க

காத்தான் - சரி சரி! சுருக்கா பறிச்சிட்டுப்போ! இங்க பூச்சிப்பொட்டுவ எதாவது கெடக்கும், அந் திப் பட்டா வடக்கத்தி காட்டிலே இருந்து நரி வேறவந்து இந்தக் கருப்பங்கொல்லையை அநியாயம் பண்ணுது. நம்ப பண்ணே சின் னய்யா இல்லே, சீமைபோயி படிச்சிட்டு வந் தாங்களே, அவுங்க வேற இங்க வந்து நரிய வெரட்டறேன் வெரட்டறேன்னு, வெத்து வெடிவைச்சி கெளப்பராங்க ... அ ... நான் வாரேன் அதோ அந்த மோட்டுக்கு கொஞ் சம் தண்ணி வைக்கணும் [போகிருன்]

முல்லை - ம் .. ம் . ம்... [சிரிப்புடன்] காத்தான் தாத்தா நல்லவரு !

[திடீரென அங்கு, லண்டன் அம்பி வருகிறான். அவனைப் பாராதவள் போல முல்லை பச்சிலை பறிக்கிறாள். எலியைப் பூனை பற்றுவது போல் ஓசை செய்யாமல் பின்புறமாய் வந்து, அம்பி முல்லையின கண்களைத் தனது கைகளால் பொத்துகிறான்]

முல்லை - ஆ ! ! கண்ணைக் கட்டியதுயார் ? விடு விடு விடு !

அம்பி - ஊகும் ... ஊகும் [குழந்தை குரலில்]

முல்லை - விடுகிறாயா இல்லையா ? என்ன அநியாயம் !

அம்பி - நியாயாந்நியாயம் அந்தக் கைகளுக்குத் தான் தெரியும். உன் கேள்விக்குப் பதில் அவைகளே சொல்லட்டும்.

முல்லை - அப்படியென்று வாய்தானே சொல்லுகிறது ; கைகள் சொல்லவில்லையே !

அம்பி - ஏன் சொல்லவில்லை ? இதோபார் ! பேசும் வாய்க்கு ஒரு முத்திரையும், [முத்தமிடுதல்] கூசிக்குலுங்கும் உடலுக்கு முற்றுகை பராக்கும் [கட்டியணைதல்] வைக்கிறது.

முல்லை - இல்லை, மோகாந்தகாரம் பிய்க்கிறது !

அம்பி - ஆம், அதுவும் உன் விழி அம்பின், மொழி அன்பின் குறும்புத் தனத்திலிருந்துதானே ஆரம்பிக்கிறது !

முல்லை - [சரசமாய்] ஆமாம் ! போதும், என்ன இருந்தாலும் நீங்கள் என்னை இப்படி ஏமாற்றக் கூடாது. அவசரப்பட்டு, நான் இதுவரை ஏதாவது பேசியிருந்தால் ?

அம்பி - ஓகோ ! இதைவிட என்னை இன்னும் ஏராளமாய்ப் பேசவேண்டுமென்கிற ஆசையோ ?

முல்லை - ஆசையோ ! ஆசை ! ஆகா ! உங்களுக்கு எப்போதும் இந்த வினயப் பேச்சுதான் !

அம்பி - ம்... கோபமா? இதற்கா கோபம் ம்...ம் எவ்வளவு வேண்டுமானாலும் கோபித்துக் கொள்! ... "உண்மை இன்பத்திற்கு ஊடல் அவசியம்" என்னும் ரகசியம் ஆணை விட பெண்ணிடத்தில்தான அதிகம் பதிந்து கிடக்கிறதாம். இது மனோதத்துவம்!

முல்லை - தத்துவமில்லை, "பெண்களை நாம்தாம் எப்படியும் எத்துவம்" என்ற ஆண்களுக்குள்ள பெருமிதம்!

அம்பி - ஒன்று சொன்னால் ஒன்பது சொல்கிறாயே!

முல்லை - ஒன்பதென்ன அவசியமிருந்தால் ஐம்பது கூடச் சொல்லலாம். உள்ளதைச் சொல்ல ஒளிமறைவென்ன?

அம்பி - சரி சரி ... அந்த ஆராய்ச்சி இருக்கட்டும் முல்லை ...

முல்லை - இல்லை! ... எங்கம்மா வரும் நேரமாயிற்று என்னை விடுங்கள்!

[பிடியிலிருந்து நழுவுகிறாள்]

அம்பி - என்ன இது? மின்னமல் தோன்றிய விண் இடியா? என் கண்ணல்லவா? முல்லை! [முத்தமிட்டு] இன்று நமது சந்திப்பு! ......

முல்லை - இன்றுமட்டும் தானா?

அம்பி - இல்லை, இல்லை, என்றும்தான் ... முல்லை உனது இன்பச் சொல்லில் தேன்மட்டுமல்ல திறமையும் நேர்மையும் நீதியும் ததும்புகின்றனவே!

முல்லை - இது பெண்கள் மனதைக்கவர ஆண்கள் கற்றிருக்கும் சுருக்கு வழியோ?

அம்பி - இல்லை, இது ஆணின் படுதோல்வியை மறைமுகமாய்ப் பரிகசிக்கும் பெண்ணின் விசித்திரப் பண்பு!!

முல்லை - அம்பி! உண்மையைச் சொல்லுகிறேன்; நீங்கள்தான் எனது இன்பபுரி! நமது

காதல் உயிருள்ளது. நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சிலும் அது கலந்திருக்கிறது.

அம்பி - அம்மட்டுமா ? அது நமது உணர்ச்சியில் ஊடுருவி உள்ளும புறமும் ஒளிவிடுகிறது! உடலில் ஓடிப்பாயும ரத்த ஓடையின் ஊற்றுக்கண் ! ஈருடலில் ஓருயிராய் உறைவது ! நமது இணைப்பு, ஒன்று பட்டால் மற்ரென்று வாழாத அன்றிற் பறவைகளின அமைப்பு போன்றது ! முல்லை நீயே என் எதிர் காலம் !

முல்லை - அதில் தாங்களே என் வாழ்வு ! அம்பி! இதோ பாருங்கள் "ஆம் ஆம" என்னும் இதயத் துடிப்புகளின் ஓசையை !

அம்பி - நான் எங்கிருக்கிறேன் முல்லை...?

முல்லை - அம்பி ! மறந்துவிட்டேன் .. நான் இன்று அதிக நேரம் தங்குவதற்கில்லை ! அம்மாவுக்கு மருந்து செய்து கொடுக்க வேண்டும் ...... போகிறேன் .

அம்பி - ஆமாம் "போகிறேன்" ம்... [பெருமூச்சுடன்] நான் இங்கு சாகிறேன் ...

முல்லை - பிரிவின் வெப்பம் இருவிடத்திற்கும் பொதுதானே சுவாமி ! [முல்லை அகல்கிருள்]

காத்தான் - எசமான் ! எசமான் ! வாங்க, வாங்க ! நரி ! நரி !

அம்பி - முழு முட்டாள் ! நாரி வேட்டைக்கும் நரி வேட்டைக்கும் உள்ள வித்தியாசமே இவனுக்குத் தெரியாது போலும் ! ரொம்ப குறுகிய மனப்பான்மை உள்ளவன். அதனல் தான் நாரியை நரியென்று குறுக்கல் விகாரம் ! [திடீரென்று]

காத்தான் - விகாரமில்லை! விவகாரம், ரொம்ப பெரிசிங்க: புறப்படுங்க ............

(தொடரும்)

# கடவுள் எண்ணமும் மதமும்

ஜமதக்னி

கடவுள் என்பது மனிதன் மனத்தில் மட்டும் தோன்றியதோர் கருத்து. மனிதன் என்றும் இருந்து வருவதில்லை. உலகம் தோன்றிய நாளில் இருந்தும் அவன் வாழ்ந்து வரவில்லை. மனிதன் இல்லாத காலம் பல கோடி ஆண்டு. அவன் பிறந்த நாள் வெகு சமீபத்தில் தான், ஏறக்குறைய ஐம்பதினாயிரம் ஆண்டு இருக்கும். உயிரினங்கள் இல்லாத மலட்டுக்காலமும் உண்டு. உயிர் வரலாற்றில் மனிதன் வெகு சமீபத்தில் இருக்கும் மைல் கல் மட்டுந்தான்.

கருத்துக்களை சிருஷ்டிப்பவன் மனிதன். அவனே கடவுள் என்ற எண்ணத்தையும் தன் மூளையில் சிருட்டித்தான். கருத்துக்களை மூளையில் தூண்டுபவை வெளியுலகப் பொருள்கள். மனிதன் தனக்கு வேண்டிய நுகர்வுப் பொருள்களை இயற்கையில் இருந்தும் எடுக்க வேண்டும். தன் உழைப்பை இயற்கையகத்தே செலுத்தி அதனுடன் போராட வேண்டும். இயற்கையோடு வெற்றிகரமாகப் போராட வேண்டுமானால், அதன் பாங்கினை உணரவேண்டும், இயற்கைப் பொருள்களோடு தொழில் புரியும்போது கருத்துகள் உதிக்கின்றன. அவை மனிதன் மனதில் தோன்றிக் கொண்டிருந்த நாள் முதலாகக் கடவுள் என்ற எண்ணம் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது. மனித சரித்திரப் பருவந்தோறும் மனிதன் நினைத்துக் கொண்ட கடவுள் எண்ணமும் ரூபமும் மாறிய வண்ணம் வந்து கொண்டிருக்கின்றன. தான் அர்த்தம் செய்ய முடியாத பொருள்களையெல்லாம் கடவுள் சிருஷ்டி என்று முடிவு செய்தான். பொருள் உற்பத்தி செய்வதில் கைத்தொழில், கூட்டுறவுத்தொழில் யந்திர ஆலைத்தொழில் முதலிய வகைகள் மாறுந்தோறும் சமூக வர்க்கங்களும் அமைப்புகளும் மாறிக் கொண்டு வருகின்றன; அவற்றிற்கேற்ப கடவுள் எண்ணமும் மத அமைப்புகளும் மாறிக்கொண்டு வருகின்றன.

கடவுளை மனிதனே சிருஷ்டித்தான்; எனில் அது

வெளியுலகப் பொருள்கள்
போன்ற உண்மை இருப்பு
உடையதல்ல; மனிதன்
மனதில் கருத்துவடிவமாக
இருப்பது. அப்படியானல்
பலகோடி ஆண்டு நெடிய
ஆயுள்படைத்த இவ்வையம்
யாரால் சிருஷ்டி செய்யப்பட்
டது? இவ்வகிலத்தை யாரும்
சிருஷ்டி செய்யவில்லை.
இது பொருள்களால் ஆக்
கப்பட்டுள்ளது. பொரு
ளுக்கு முன்னே சூன்யம்
இருந்ததில்லை. சூனயத்தி
லிருந்து எதுவும் பிறப்ப
தில்லை. என்றும் நிலை
பெற்றிருந்து ஒரு வடிவமும்
குறிப்பும் அற்ற பொருள்
(MATTER) பொருளே இன்று
வரை வளர்ந்து வந்திருக்
கிறது. பொருள் வளர
வதற்கு யாதொரு, புறத்
தூண்டுதலும் அவசிய
மில்லை. கடவுள் எண்ணம்
இல்லாமலேயே வித்துமுளைக்
கின்றது. மேகம் பொழிகின்
றது; ரயில் ஓடுகிறது, குழந்
தை பிய்க்கிறது: வானொலி
கேட்கிறது பொருளுக்குள்
ளேயே வளர்ச்சிக்குரியசக்தி
(ENERGY) அடங்கியுள்ளது.
அணுவைப் பிளந்தால்
உயிரினங்களை அதிசயமாக
முன்னேற்றவோ அல்லது
வையமுழுவதையும் அழிக்
கவோவல்ல மாபெருஞ்சக்தி



உள்ளது. ஜப்பானின் இரு
நகரங்கள் அணுக்குண்டுக்கு
இரையானது இன்னும் நினை
வில் அகலாமல் உள்ளது.
வெறும் பொருள் வளர்ந்தே
ஷேக்ஸ்பியர் காளிதாசன்
கம்பன் இளங்கோ, வள்ளு
வர், பாரதி, பாரதிதாசன்,
லெனின், ஸ்டாலின், சர்ச்சில்,
காந்தி, ஈ.வே.ரா. வரை வந்
திருக்கிறது.

இவ்வதிசயப் பொருள்
வளர்ச்சி வரலாற்றை எக்ஸ்
பிரஸ் வேகத்தில் கவனிப்
போம். தோற்றத்திலே
பொருள் இருபிரிவுகளாக
வரையறுத்துக் கொண்டது
(1) மூல அணு (PROTON) உடன்
பாட்டு மின்சாரசக்தி (POSI
TIVE ELECTRICAL CHARGE)
கொண்டது. (2) மின அணு
(ELECTRION); எதிர் மறை
மின்சாரசக்தி (NEGATIVELY
CHARGED) கொண்டது. ஒரு
மூல அணுவைச் சுற்றிலும்
ஒன்று அல்லது மேற்பட்ட
மின் அணுக்கள். சுழலுந்தன்
மையில் இயைந்து வெவ்
வேறு பொருள்களாயின
ATOMS பொருள்கள்
சிலவற்றிற்கு 150,00,000 அங்
குலம் குறுக்களவு இருக்க
லாம். அணுக்கள் அவ்வளவு
நுண்ணினும் நுண்ணியன்
ஒத்த பொருளணுக்கள்
எண்ணிக்கையில் சேர்ந்

தமையால் பொன் வெள்ளி இரும்பு முதலிய உலோகங்களும் சோடியம், சிலஷியா போன்ற இதர தாதுக்களும் பாதரசம் போன்ற திரவங்களும், ஹைட்ரோஜன், பிராணன் போன்ற வாயுக்களும் ஆயின (COMPOUND) ஒன்றுக்கு மேற்பட்ட தாதுக்கள் இயைந்து கூட்டுப் பொருள்களாயின இயற்கையில் அநேக கூட்டுப் பொருள்கள் உள்ளன. மனிதனே அவற்றைத் தன் ஆராய்ச்சிக் கூடத்தில் (LABORATORY) சிருஷ்டி செய்கிறான்; இயற்கையில் இல்லாத புதிய கூட்டுப்பொருள்களையும் சிருஷ்டிசெய்கிறான். சோற்றுப்பு, தண்ணீர், சர்க்கரை முதலியன நாட்டுப் பொருள்கள். ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுப்பொருள்கள் இயைந்து பலகூட்டுப் பொருள்களாயின (COLLOIDS) ஒன்றுக்கு மேற்பட்ட பல கூட்டுப் பொருள்கள் இயைந்து முதல் உயிர்ப் பொருள் (PROTOPLASM) தோன்றிற்று; நமது உடம்புச் சதைபோல இருந்தது. முதலில் தண்ணீரில் தான் உயிர்ப்பொருள் தோன்றியது. அது தன்னையேதான் மறுவுற்பத்தி செய்துகொள்ளும் சக்தி வாய்ந்தது. அதற்கு அவயவமில்லை. அதில் இருந்து ஒரே அவயவமுடைய உயிரணு (CELL) பிறந்தது. இதுவும் தண்ணீரில் தான் பிறந்தது. இதுவும் தன்னையே தான் மறுவுற்பத்தி செய்துகொள்ளும் சக்தி வாய்ந்தது. ஒற்றை உயிரணுக்கள் பல இணங்கி தாவரமும் மிருகமும் உருவாயின.

தண்ணீரில் வாழ்ந்த தாவரங்களும் மிருகங்களும் தரைக்குகுடியேறின. தண்ணீரிலும் நிலத்திலும் வாழும் சக்தி வாய்ந்த தவளை போன்ற உயிரினங்கள் பெருகின. தரையில் குடியேறிய பல உயிரினங்கள் ஊர்வனவாகப் பெருகின. நீரில் வாழ்ந்த உயிர்களின் இன்றைய மிச்சங்கள் மீன் முதலியன. ஊர்வனவற்றின் இன்றைய மிச்சங்கள், பல்லி ஓணான், உடும்பு முதலியன. ஊர்வனவற்றில் இருந்தும் பாலூட்டும் உயிர்கள் (MAMMALS) தோன்றி வளர்ந்து வருகின்றன. ஊர்வன சிலவற்றில் இருந்தும் பறவைகள் தோன்றிப்பெருகின. பாலூட்டும் உயிர்களில் இருந்தும் சில மரமேறிகளேற்பட்டன. அவை மரத்தின் கிளைகளில் இரண்டு கால்களால் நடந்து நிற்கும்

சக்தி பெற்றன். முதலில் குரங்குகள் தோன்றின. மனித க்குரங்கு, கொரில்லா, சிம் பான்சி, லெமூர்குரங்கு முத லியவை வளர்ந்தன. இவற் றிலிருந்தும் உதித்த ஓர் உயிர் நிமிர்ந்து நடந்தது, கருவிகள் இயற்றியது; அது ஜாவா மனிதன். இதுவே மனிதனின் மூதாதை என் கின்றனர் விஞ்ஞானிகள்.

மனிதன் முதன் முதலில் முழு மிருகமாகவே இருந் தான். நினைக்கும் சக்தி மிக வும் குறைவாக இருந்தது. பிறந்த குழந்தை மாதிரி எண்ணியிருப்பான். கடவுளை தன் மூளைக்குள் சிருஷ்டி செய்யும சக்தி அவ்வளவாக இல்லை. குகைகளில், பாறை களில் வசித்தான். கல்கருவி களை இயற்றினான். இனங் களாக (TRIBES) சேர்ந்தான குடும்பங்களாக வாழ்ந்தான வில் அம்பு உணவு வேட் டைக்காகக் கண்டு பிடித் தான். உழைப்பை வளர்த்தி தேவைக்கதிகமான பொரு ளுற்பத்தி செய்தான். அத னால் பெரும்பாலோர் ஒரு சிலருக்கு அடிமைகளாயி னர். அடிமைச் சமூகம் ஏற் பட்டது. பின்னர் அடிமைச் சமூகத்திற்குப் பதில் பிரபுக் கள் சமூகம் ஏற்பட்டது. முழு அடிமை நிலவடிமையா னான்; பாதி உரிமைகளைப் பெற்றான். முதல் முதலா ளிகள் தோன்றினர். அரை யடிமைகளைத் திரட்டி முதல் முதலாளிகள் புரட்சி செய்து பிரபுத்துவ அரசுகளை ஒழித் தனர். முழு உடம்பு விடு தலை பெற்றோர் தொழிலா ளிகளாயினர். ஆனால் பொரு ளாதார வகையில் ஒரு சில முதலாளிகளின அடிமைக ளாயினர். தொழிலாளர்கள் ரஷ்யாவில் புரட்சி செய்து பொதுவுடைமை நிறுவி எத் தகைய அடிமைத்தனத்தை யும் ஒழித்தனர். அங்கு எல்லாமக்களும் உயர்ந்த நாகரீகம், கல்வி, அறிவு, விஞ்ஞானம் முதலியவற் றின அடிப்படை மீது ஆதி மனிதன் போன்றே கடவுள் எண்ணமற்ற வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இதர நாடுகளில் மனிதன் பொருள் உற்பத்தியை அதி கரித்து நாகரீகம் வளர்த்து ஒரு சிலருக்கு அடிமையா னது மட்டுமல்லாமல், தானே தன் மூளைக்குள் சிருஷ்டி செய்த கடவுள்கருத்துக்கும் மத அமைப்புகளுக்கும் அடி மையானான். பிரபஞ்சத்தை விளக்க முயன்றபோது கட வுளைக் கொண்டு வந்தான் மனிதன். சோறு துணி கொடுக்கும் ஆளாகக்



# எனது குறை

## டாக்டர் கூறுகிறார்.

படித்தேன்; பட்டம் பெற்றேன். சாதாரணபடிப்பல்ல; சாதாரணபட்டமுமல்ல. பெற்றோர், பிறப்பாளர், உற்றார், உறவினர் கண்டு பெருமைப்படும் படிப்பு; என் ஜோட்டு இளைஞர்கள் கண்டு பொறாமைப்படும் பட்டம். ஆனால் எனக்கு மட்டும் நிம்மதி இல்லையே!. ஏன்?

வெறும் பொழுது போக்குக்காக, மருத்துவக்கலையின் நுட்பததை யறிய அதில் இன்பம் பெறமட்டும் நான் டாக்டர் படிப்பை நாடவில்லையே! பெற்றோர்களும் அவ்வுன்னத காரியத்துக்காக என்னை அனுபபவில்லையே! டாக்டர் படிப்பும் பட்டமும் எனது வாழ்வெனும் வியாபாரத்துக்கு ஒரு மூலதனமாக இருக்கட்டுமென்பதற்காகத் தானே அவர்கள் என்னை இத்தகைய தொழில் முறைபபடிப்புக்குப்பிடித்துத்தள்ளினார்கள்; அதே காரணத்துக்காகத்தானே நானும டாக்டர் படிப்பைத தேர்ந்தெடுத்தேன்!

நம் நாட்டில் எம்.பி.பி.எஸ் (டாக்டர்) பட்டப்படிப்பெனறால் வெறுங்கிள்ளுக்கீரையல்ல. நடுததர வாழ்க்கை நடத்துவோர் தங்கள மக்களை இத்தகு படிப்புக்கு அனுப்புவதெனபது வெகு வெகுகடினம்—மிகமிக அதிகச்செலவு செய்து முடித்துத் தீரவேண்டிய படிப்பு இது. எனினும் நடுத்தர வாழ்க்கை படைத்தோர் எளிதில் விட்டுவிடுகின்றனரா "நம்மால் ஆகாது இதை சமாளிக்க" என்று. கடன் பட்டாகிலும் பிள்ளையை டாக்டராக்கி விட

---

கடவுளை எண்ணினன். சரியான பிரபஞ்ச அறிவும் சோறு துணி யாருக்கும் கொடுக்கவல்ல ஒப்பற்ற சமூகமும் ஏற்பட்டபின்னர் கடவுள எண்ணமும் அதைச் சுற்றிலும் வளர்ந்த மத அமைப்புகளும் ஒழிந்து மறையும்.

வேண்டுமென்று, விளைவை ஒரு சிறிதும் எண்ணிப் பாராது அனுப்பிவிடுகின்றனர் கல்லூரிக்கு. ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் கழித்து அருமை மகன் டாக்டர் பட்டத்தோடு வீடு திரும்புகிறான்; அடைக்க வேண்டிய குடும்பக்கடன் ரூ. 8,000 ஆகிவிற்கிறது. 8,000 ரூபாய் பற்றாக் குறை பட்ஜெட்டோடு இளம் டாக்டர் தனது வாழ்வைத்தொடங்குகிறார். ஆயிரக்கணக்கான அத்தகைய டாக்டர்களில் நானொருவன்!

"தோழர் கண்ணப்பன் டாக்டரா? அவருக்குக் கார் இருக்கிறதா? ரேடியோ வைத்திருக்கிறாரா? அழகிய பரந்தபங்களா இருக்கிறதா? பங்களாவின நான்கு பக்கலிலும் சுற்றுச் 'சுவரும் அதனுள் இளமரக்காவும் உள்ளனவா? காலை, நண்பகல், மாலை, இரவு ஒவ்வொருநேரத்துக்கும் வெவ்வேறுவகை உடுப்பு அணிகிறாரா?" சீமான்களும் சீமாட்டிகளும் அவரது பங்களாவுக்கு வந்து போகின்றனரா? டாக்டர் பட்டத்துக்கு தகுதியுடையவரெவரும் தன்னை மேற்கண்ட லட்சணங்களுக்கு உரியவராக்கிக் கொள்ளவேண்டும்! இல்லையெனில், மார்க்கெட்டில் செலாவணியிருக்காது. ஆகவே, நானும் இந்த லட்சணங்களை மேற்கொள்ளவேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்துக்கு ஆளானேன்.

ஆயிரம் பேரைக் கொன்றால் அரைவைத்தியர் என்பார்களே நாட்டுப்புறத்தில், அது முற்றிலும் உண்மை. நல்லவிதமாகவோ கெட்டவிதமாகவோ டாக்டரொருவர் விளம்பரமாகி விட வேண்டும் அப்பப்பா? அத்தகைய விளம்பரத்தை சம்பாதிக்க ஒவ்வொரு டாக்டரும் படும்பாடு......? அவர்கள் போல நானும் பட்டேன் பெரும்பாடு, நான்கு பேர் என்னை டாக்டர் என்று கூற வேண்டுமென்பதற்காக?

'அப்பா! நாட்டில் வக்கீல்களும டாக்டர்களுந்தான் பெருத்து விட்டார்கள்! எங்கு நோக்கினும் அவர்கள் போர்டுகள்தான்!' என்று சாதாரண மனிதரும் கூறிக்கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் புற்றீசல் போலப் பெருகிவருகிறார்கள் என் வர்க்கத்தார். இப்போட்டியைச் சமாளிக்க, எடுத்த பெயரை நிலை நிறுத்

திக்கொள்ள, என்னென்ன செய்யவேண்டியிருக்கிறது! பத்தாயிரம் ரூபாய் வரை முதலீடு செய்த வியாபாரமல்லவா? பெரு நகரங்களிலிருந்து போட்டிபோட வாய்ப்பு வசதியில்லாத டாக்டர்கள் சிறு நகரங்களுக்கு, ஏன், கிராமங்களுக்குக் கூட சென்று விடவேண்டிய சந்தர்ப்பம் வந்து விடுவதுண்டு. என் செய்வது?

இந்த நாட்டுக்கு இன்னும் ஆயிரக் கணக்கான டாக்டர்கள் தேவை, நகரங்களுக்கேயல்ல; நாட்டின் பெரும்பான்மை மக்கள் வதியும் கிராமங்களுக்கு. கிராமப் பெருங்குடி மக்களுக்கு அன்றாட வைத்திய வசதிகளை அளித்து வரவும், சுகாதார மேன்மைகளைப் போதித்து வரவும தன்னலமற்ற, சீர்திருத்த மனப்போக்குடைய டாக்டர்கள் பற்பலர் வேண்டும் இந்நாட்டுக்கு. அத்தகைய சீர்திருத்த செம்மையுள்ளம் படைத்தோர் எத்தனைபேர் உள்ளனர் நாட்டில்? உள்ளபடியே சீர்திருத்த நோக்கம் படைத்தவர் இரண்டொருவர் இருப்பினும், சூழ்நிலையும் சந்தர்ப்பமும் அவர்களை அப்படி விட்டுவிடுவதில்லை. தியாக மனப்பான்மை யுடையவர்தான், தன்து தொழில் திறமையை ஓரளவு பொது நன்மைக்குப் பயன்படுத்த சலிக்காதவர்தான், இப்படிப்பட்ட சீர்திருத்த வேலையில் ஈடுபடமுடியும். அப்படிப்பட்ட பிறர்க்குரியாளர் எத்தனை பேருள்ளனர் இங்கு?

பேரும் புகழும் படைத்த டாக்டர்கள், நல்ல வருவாயும் வாழ்வும் படைத்த டாக்டர்களாகிலும் மன நிம்மதியுடன் வாழ வழியிருக்கிறதாவென்றால், அதுதான் இல்லை. வருவாய்க்கு மீறிய செலவு டாக்டர் குடும்பத்தின் முக்கிய அம்சம். இச்செலவின் பெரும்பகுதி வெறும் பேருக்கும் ஆடம்பரத்துக்கும் செய்யப்படுவது; ஒரு பகுதி பூர்வீகக் கடனையடைப்பது; மறுபகுதி நவ நாகரிக வாழ்வுக்குப் பயன்படுத்தப் படுவது. பொறுப்புள்ள டாக்டரின் லட்சணம் நிம்மதியின்மையும், முக்கிய ஞாபகமறதியும்! ஆம், அவரது பொறுப்பு வாய்ந்த பதவி அவரை அமைதியற்ற புருஷராக்கி விடுகிறது. ஒரே நாளில் குடல் ஆப்ரேஷன்களும், அரசப்பிளவை ஆப்ரேஷன்களும், நரம்பு இன்செக்ஷன்களும் செய்து, எத்தனையோ

43-ம் பக்கம் பார்க்க.

# அறிஞர் பக்கம்



## இருந்தால் கூறுங்கள்!

தெருவிலே, 'பிரி பிரியாக வர்ணத் துணியைச் சுற்றிக் கொண்டு, பேர் பேராக உள்ள சாமன்களின் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு வட்டிக் கணக்கைப் பார்த்துக்கொண்டே, வயிற்றைத் தட்டிக் கொண்டுள்ள மார்வாரியையும் பாருங்கள்! பாரம் நிறைந்த வண்டியை, மாட்டுக்குப் பதிலாக இழுத்துச் செல்லும் தமிழனையும் பாருங்கள்! மெருகு கலையாத மோட்டாரில் பவனி வரும் சேட்டுகளையும் பாருங்கள்! கூலி வேலைக்கு வெளிநாடு செல்ல, கிழிந்த ஆடையும் வறண்ட தலையும் ஒளியிழந்த கண்களும் கொண்ட தமிழன், கப்பல் டிக்கட்டுக்குக் காத்துக் கொண்டிருக்கும் காட்சியையும் காணுங்கள்!

எங்களை மறந்து - இந்தக் காட்சிகளைக் காணுங்கள்— நாங்கள் கூறுகிறோம் ஒரு திட்டம் என்பதைக் கூட மறந்து — நீங்களாக யோசித்து ஒரு திட்டம் கூறுங்கள்—பண்டைப்பெருமையுடன் இருந்த ஒரு நாடு, பல்வேறு வளங்கள் நிரம்பிய நாடு, இன்று, வடநாட்டுடன் இணைக்கப்பட்டு, இப்படி வதைபடுவது நியாயமா? இந்த இணைப்பிலிருந்து விடுபட்டு, தனித்துநின்று, தனியரசு நடத்தி, நாட்டுவளத்தைப் பெருக்கி, அந்த வளம் நாட்டு மக்களுக்கே பயன்படும்படிச் செய்வது, குற்றமா? அதற்கு, திராவிட நாடு திராவிடர்க்கே என்பதன்றி வேறென்ன திட்டம் இருக்க முடியும்? இருந்தால் கூறுங்கள்!

தண்டமிழ் மன்னர்கள்

# சோழன் பெருநற்கிள்ளி

சோழன் போர்வைக் கோப் பெருநற்கிள்ளி தித்தன் என்னும் மன்னவனுடைய மகனுவான். தனது தந்தையுடன் பகைத்துக் கொண்டு, அதன் காரணமாக நாடிழந்து, வறுமை மேலிட்டவனுய்ப் புல்லரிசிச் சோற்றை உண்டிருந்தான் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி. முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனுடன் போரிட்டு அவனைக்கொன்ற தன் மூலம் இவனது வீரத்தையறியலாம்.

மறவன் இவன் தன் வீரத்தையும் வலியையும்புகழ்ந்து புலவர் சாத்தந்தையாரும், பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையாரும் பாடியுள்ளனர். போர்வைக் கோப் பெருநற்கிள்ளியின் கையில் சிக்கியோர் தப்புவதரிது ; அவர்கதி அதோகதி தானென்பதை சாத்தந்தையார், "யார் கொல் அளியர் தாமே, ஆர்நார்ச் செறியத் தொடுத்த கண்ணிக்கவிகை மள்ளன் கைப்பட்டோரே" என வர்ணிக்கிருர்,

பெருநற்கிள்ளியின் தடந்தோள் திறனையும் ஆடல் சிறப்பையும் கண்டு, பெண்டிர்கள் பலர் கருத்தழிந்து நின்றனர். பெண்டிர்களின் மனப்போக்கை சித்தரித்து பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையாரென்ற பெண்பாற் புலவரொருவர் பாடலொன்று புனைந்துள்ளார். ஒரு தலைக்காமமென்ற கைக்கிளைத் திணையின் பாற்படும் அப்பாடல் இவன் தன் சிறப்பைக் குறிப்பாக உணர்த்துகிறது.

புலவர் கூறுகிருர்: "வீரக் கழலினையும் கரிய நிறத் தாடியினையுமுடைய இவ் விளையோனை நினைந்து நினைந்து, உருகி உருகி இளைத்துப்போனேன். இது காரணமாக என் கைவளையல் கழல்வதாயிற்று. இது கண்ணும தாய் என்னைப்பற்றி என்ன நினைப்பாளோ? இது குறித்துதான் நான் அஞ்சுகிறேன்"

என்று வரும் அடிகளில் ஒருதலைக்காமத்தின் உச்சநிலை உணர்த்தப்படுகிறது.

இத்தகு ஆடலழகர்களை தோற்றுவித்ததுதான் தமிழ்த்திருநாடு !

# அன்பர்கள் மேடை ★

[அன்பர்களின் கருத்துக்கள், சுதந்தர எண்ணங்கள் இப்பகுதியில் இடம் பெறும். இதில் வெளியாகும் கருத்துரைகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல, ஆ - ர்]

## வீட்டு நெருக்கடியும் கோயில்களும்

ஐயா,

முன்பு சென்னை நகரில் மட்டுமே இருந்து வந்த வீட்டுப் பஞ்சம் இப்பொழுது சென்னை மாகாணம் முழுமையும் நிலவி வருவதை யாவருமறிவர். சில விடங்களில் புதியமணம் புரிந்துகொண்ட தம்பதிகள் வீடு கிடைக்காமையினால், தற்கொலைசெய்துகொண்டதாகவும் செய்தித்தாள்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த நெருக்கடியான சமயத்தில் சென்னை மந்திரிசபை புதிதாக வீடு கட்டும் திட்டத்தில் முயற்சி செய்வதையறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எனினும் அஸ்திவாரம் போட்டு அழகான வீடு கட்டுவதை விட, இருக்கும் இடிந்த கட்டிடங்களை, மடங்கள் யாருக்கும் பயன்படாத சத்திரங்கள் முதலியவைகளை நல்ல முறையில் திருத்தியமைத்து நாட்டு மக்களின் வீடில்லாத் தொல்லையைப்போக்கி, மக்களுக்கு மகிழ்ச்சியையூட்டுவதே ஆளவந்தாரின் அவசரமும் அவசியமுமானவேலையாகும்.

இன்னும், தமிழ் நாட்டில் பெரிய பெரிய கோயில்கள் பலவிருக்கின்றன. அவைகளைச்சுற்றி பெரியமதில்கள் அணிசெய்கின்றன. இரண்டுக்குமிடையே பரந்தவெளி. எட்டடிக் கட்டிடத்தில் எழுந்திருக்க முடியாமல் இருக்கும் இறைவனுக்கு இவ்வளவு பெரிய அரண் அமைக்கப்பெற்ற பரந்த இடம் தேவை என்றால், திரைகடலோடியும் திரவியம் தேடியாவது இன்ப வாழ்வு வாழ்ந்து இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்ற அவாவினால் நல்வாழ்வுவாழ வேண்டுமென விரும்பும் நாட்டு மக்களுக்கு எவ்வளவு இடம் தேவை? மனித

உள்ளம்படைத்த மந்திரிகள் அறியார்களா ?

ஆகவே, உடனடியான பிரச்னையாக, உள்ளத்தால் அறிந்து உவகையுடன இந் நல்ல காரியத்தைச் செய்து இறைவனின் இல்லத்தைத் தவிர சுற்றியுள்ள இடங்களை இன்பபுரியாக்கி நாட்டுமக்களுக்கு மகிழ்ச்சியையூட்டுவார்களாக !

தமிழரசன்
சென்னை

* * *

## வேண்டாம் விஷப்பரீட்சை !

ஐயா,

தோழர் ராஜகோபாலாச்சாரியாரின் ஆட்சியிலே இடம்பெற இருந்த இந்திக்கு ஆயிரக் கணக்கான தமிழர்களின் 'இந்தி ஒழிக' என்ற இருதய கீதம் சாவுமணி அடித்தது. ஆணும் பெண்ணுமாகத் தங்களுடைய தாய்மொழி வாழ வேண்டும் என்ற கருத்துக்காக சிறைக்குள்ளே பெருமூச்சு விட்டதன் பலனகை, வாழ்வைப் பணயமாக வைத்த இளைஞர்களின் ஏகோபித்த சக்தியினால் இந்திக்குக் கல்லறை கட்டி அதன்மேல் தாலமுத்து, நடராசன் ஆகியோரின் இரத்தத்தைத் தெளித்தோம். கட்டாய இந்தி ஒழிந்தது. தமிழ்நாட்டில் தமிழுக்கு வந்த ஆபத்து தமிழரால் ஒழிக்கப்பட்டு, அந்த சம்பவம்சரித்திரத்திலே முக்யத்வம் பெற்றுவிட்டது.

இன்று, இந்தி மெதுவாக நுழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் பல பள்ளிகளிலேயும் இந்திநுழைந்துவிட்டது இள உள்ளம் படைத்த பள்ளிச் சிறுவர்களை இந்தியிலே "வணக்கம்" என்று கூறும்படி, அவர்கள் வற்புறுத்துகிருர்கள். பிறந்தவுடன் தாயைப் பார்த்து 'அம்மா' என்று அழைத்ததைக்கூட மறந்து விட்டார்கள்போலும். ஆமாம் ! அவர்கள் நாட்டின் நலனை அழிக்கவந்த வெட்டுக்கிளிகள் !

இந்தி எதிர்ப்புக் காலத்தில் கையில் குழந்தைகளுடன் சிறைக்குள் நுழைந்த தாய்மார்களின் வீரசக்தி மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், பெல்லாரியில் பெரியார். அனுபவித்த இருதய துடிப்புகளின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், தாலமுத்து, நடராசன் சிரித்துக் கொண்டே செத்தபோது

விட்ட கடைசி மூச்சுன்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் இங்கு இந்தியைக் கொண்டு வருவது விஷப் பரீட்சை போன்றது. 9, 10 ஆண்டுகளிலே தமிழனுக்குத் தமிழின் மேல் உண்டாகியிருக்கும் தமிழ்வெறியிலே அளவுகோலை வைக்கவேண்டாம்!

'அன்னம்'
பாபநாசம்

* * *

## தமிழரா, திராவிடரா?

ஐயர்,

தமிழரா, திராவிடரா என்ற பிரச்னை நாளுக்குநாள் அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது. சர்வதேசங்களும் தங்கள் தங்கள் முன்னேற்றத்துக்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கையில், இருநூறு ஆண்டுகளாகக் கடல்கடந்த அன்னியரின் ஆதிக்கத்திலிருந்த இப்பரந்த உபகண்டம் விடுதலைபெற்று நிற்கும் நேரத்தில், இன்னும் தென்னாட்டவர் தாங்கள தமிழரா, திராவிடரா என்ற சிந்தனையிலீடுபட்டிருப்பது வருந்தத்தக்கக் காரியமாக இருக்கிறது. இப்பெயர் போராட்டத்துக்கு ஒரு முடிவு இல்லையா?

ரெ. அண்ணாமலை
திருச்செந்தூர்

[“ஏன் திராவிடரென்கிறோம்?” என்ற பெரியாரின் சொற்பொழிவுப்பகுதி வேறிடத்தில் வெளியிடப் பட்டுள்ளது. நாம் நம்மை திராவிடர் என்று அழைத்துக் கொள்ள வேண்டியதற்கான தத்துவம் வேறு; ‘தமிழர்’ என்று கூறிக் கொள்ள விழைவோரின் தத்துவம் வேறு. ஆ-ர்.]

---

38-ம் பக்கத் தொடர்ச்சி

பேருக்கு குளோராபாரம் (மயக்கமருந்து) கொடுத்து படுக்கவைத்துவிட்டு, எண்ணிலடங்காதவர் பற்களையெல்லாம் பிடுங்கிப் போட்டு, கணக்கற்றபேரின் கண், காது, மூக்கு வியாதிகளையெல்லாம் கவனித்து, நூற்றுக்கணக்கான மக்களுக்கு உள்ளுக்கு மருந்து கொடுத்துவிட்டு, மாலையில் வீடு திரும்பும் டாக்டருக்கு-மானிட வர்க்கத்தின் ஜீவநாடியின் பாசக்கயிற்றைத் தனது கையில் பிடித்து நிற்கும் அவருக்கு-உள்ளபடியே நிம்மதி எப்படியிருக்கும்?

இப்படிப்பட்ட ‘நிம்மதியற்ற ‘பிரகிருதிகளில்’ நானொருவன் என்று நினைக்கும்போது’ எனக்கேநிம்மதியில்லை போங்கள்!

# புத்தக மேடை

## இராவண காவியம்

[ஆசிரியர்: குழந்தை; கிடைக்குமிடம்: அர்ச்சுனன் புத்தகசாலை, கச்சேரி வீதி, திருப்பூர்; விலை ஆறு ரூபாய்]

இராவணாசுரன், இரக்கமிலரக்கன், மானிடருள்பதர், ஒழுக்கமில் புலையன் என பலபட்டத்தாற்றப்பெற்ற, வரலாற்றிலக்கிய புருஷனொருவன் 'ராவணப்பெரியார்' என்று புகழப்படுகிறானென்றால், அவன் மீது 'காவியம்' இயற்றப்படுகிறதென்றால், அது காலத்தின் விளைவை மட்டுமல்ல, கருத்தின் வளர்ச்சியைமட்டுமல்ல, தன்மான மேம்பாட்டையுங் காட்டுகிறது. ராமாயணத்தின் எதிரொலி மாத்திரமன்று ராவணகாவியம்; உண்மைக்கவித்துவத்தின், தன்மதிப்பு, தன்னம்பிக்கை, சுதந்தரக்கலையுள்ளத்தின், இனவுணர்வுடன்கூடிய எழுச்சிமனப்பான்மையின் அற்புத சிருஷ்டியேயாகும் இராவணகாவியம். "கம்பராமாயணத்தை சுட்டெரிக்க முன்வரும் சு. ம. கள், அதுபோன்ற வேறொரு நூல்செய்துதான் காட்டட்டுமே" என்று வறட்டு ஜம்பம்பேசி, அதே நேரத்தில் தங்களது அறிவாராய்ச்சி சூனியத்தையும் மெய்ப்பித்துக்கொண்டு, புத்துலகக்கருத்துக்கள் நிறைந்த புலமைமிகு காவியங்களை இயற்றித்தர வேண்டியது நவீன காலத்தில் வாழும் தங்கள் கடமையென்பதையும் மறந்து, வீண் வேதாந்தத்திலீடுபட்ட இன்றைய புராணப்பண்டிதருக்குப்புத்தி கற்பிக்கும் வகையில், புரட்சிப் புலவர் குழந்தை இக்காவியத்தை யாத்துள்ளார், புரட்சிப்புலவரின் இத்தகை அரியநூலை எழுத்து. அசை, சீர், தளை, அடி. தொடைதவறாது படித்துப் பார்க்குமாறு நம் பண்டிதர்களுக்கு சிபார்சுசெய்கிறோம்.

## நாசகார சமூகம்

[ஆசிரியர்: எம். என். ராய்; தமிழாக்கம்: ஜோதி மோஹன்; கிடைக்குமிடம்: அறிவுச்சுடர் பதிப்பகம், துறையூர், திருச்சி; விலை எட்டணு]

இந்தியாவின் 'இரகசிய மனிதர்' எம். என். ராய்க்கு அறிமுகம் தேவையில்லை. இந்துசமூகக் குற்றங்களையும் குறைபாடுகளையும் அவர் எடுத்துணர்த்தும் வன்மை, நயம் ஒருசிறிதும் பிறழாது மொழி பெயர்க்கப்பெற்ற இந்நூல் சீர்த்த ஆர்வமிக்கார் ஒவ்வொருவருடையவும் பார்வைக்குரியது.

* * *

## குமரிக்கோட்டம்

[ஆசிரியர்: அறிஞர் அண்ணதுரை; கிடைக்குமிடம்: திராவிடப்பண்ணை, தெப்பக்குளம், திருச்சி; விலை ஒரு ரூபாய்]

இக்கால சமுதாய அமைப்பில் காணப்படும் சராசரிக் குடும்பமொன்றின் கதையே 'குமரிக்கோட்டம்'. காலமாறுவதற்கேற்ப கருத்துமாறுவதை சித்தரிக்கும் அறிஞரின் இவ்வரிய நூல் செவ்விய முறையில் அழகுற பதிப்பிக்கப்பட்டுள்ளது.

* * *

## வர்ணஸ்ரமம்

[ஆசிரியர்: அறிஞர் அண்ணதுரை; கிடைக்குமிடம்: திராவிடப்பண்ணை, தெப்பக்குளம், திருச்சி; விலை பன்னிரண்டணு]

அறிஞரின் ஆவல் நிறைவேறவில்லையெனினும், அன்றைய ஆவல் இன்று ஆத்திரமாக மாறிக்கொண்டிருக்கிறதெனினும், வர்ணஸ்ரமத்தின் கோரவிளைவுகளைப் புரிந்துக்கொள்ளவும், அம்மாபெருங்கேட்டைக் களைந்து தீரவேண்டிய மாபெரும் பொறுப்பு உள்ளதென்பதை உணர்ந்து நடக்கவும் கட்டளைக்கல்லாகத் திகழ்கின்றது இந்நூல்.

* * *

## வர்த்தக ஊழியன் (மாதவெளியீடு)

[ஆசிரியர்: டி. வி. கே. நாயுடு; கிடைக்குமிடம்: 'வர்த்தக ஊழியன்' காரியாலயம் திருச்சி; விலை நான்கணு]

வர்த்தகம், பொருளாதாரம் பற்றிய விஷயங்களை விளக்கும் இப்பத்திரிகை ஆங்கிலம் தமிழ் இருமொழிகளிலும் நடத்தப்படுகிறது. அரசியல் விவகாரங்களும் அலசப்படுகின்றன.

* * *

## பொன்னி (மாதவெளியீடு)

[ஆசிரியர்: முருகு. சுப்ரமணியன்; கிடைக்குமிடம்: பொன்னி அலுவலகம், கீழராஜவீதி, புதுக்கோட்டை; விலை எட்டணு]

அழகிய மேலட்டையுடன் மாதந்தோறும் வெளிவரும் 'பொன்னி' யில் கருத்துமிகு கட்டுரைகளும், மற்றும்பிற பகுதிகளும் நீங்கா இடம்பெற்றுள்ளன.

* * *

## செல்வி (மாதவெளியீடு)

[ஆசிரியர்: ஏ. சுப்பையா; கிடைக்குமிடம்; 'செல்வி', நாகர்கோயில்; விலை நாலணு]

அரசியல், சமூகம், இலக்கியம், விஞ்ஞானம், பொதுஅறிவு சம்பந்தமான கட்டுரைகளையேந்திவருகிறது 'செல்வி'.

* * *

## ஆயிர வைசியன் (மாதவெளியீடு)

[ஆசிரியர்: டி. டி. சொக்கலிங்கம்; கௌரவ ஆசிரியர்: புலவர். மி. பொன். இராமநாதஞ் செட்டியார்; கிடைக்குமிடம்: 'ஆயிரவைசியன்' 174, நைனியப்பநாய்க்கன் தெரு பார்க்டவுன், சென்னை; விலை நாலணு]

'ஆயிரவைசிய' வகுப்பினர்க்கு வழிகாட்டியாய் விளங்கும் இப்பத்திரிகை, அவ்வகுப்பினருக்குப் பொது அறிவும் புத்துலகக் கருத்துகளும் வழங்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

* * *

## தமிழறிவு (மாதவெளியீடு)

[ஆசிரியர்: மா. முருகன்; கிடைக்குமிடம்: தமிழறிவு நிலையம், விழுப்புரம்; விலை நாலணு]

தமிழறிவு என்று அமைந்த தலைப்புக்கேற்ப தமிழறிவையூட்டும் தகைமையதாகவே விளங்குகிறது இவ்வெளியீடு.

* * *

குயில் (மாதவெளியீடு)

[ஆசிரியர்: தி. ந. இராமன்; கிடைக்குமிடம்: குயில் நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை; விலை எட்டணா]

அறிவாராய்ச்சிக்கட்டுரைகளும், கவிதைகளும் கதைகளும் நிரம்பிய 'குயில்' சிறந்தமுறையில் கூவியழைக்கிறது தமிழரை.

* * *

அழகு (மாதவெளியீடு)

[ஆசிரியர்: என். அறிவழகன்; கிடைக்குமிடம்: 'அழகு' அலுவலகம், 289, தம்புச்செட்டித்தெரு, சென்னை; விலை நான்கணா]

சிறந்த தீந்தமிழ்ப் பத்திரிகையாவதற்குரிய அறிகுறிகளுடன், அறிவூட்டும் கட்டுரைகள் பல நிறையப் பெற்று வெளிவந்துள்ளது.

* * *

தமிழ்நாடு (மாதவெளியீடு)

[ஆசிரியர்: டி. எம். பார்த்தசாரதி; கிடைக்குமிடம்: தமிழ்நாடு 'அலுவலகம்' முத்துமாரிசெட்டித்தெரு, மண்ணடி, சென்னை; விலை இரண்டணா]

திராவிடநாடு பிரிவினை அவசியத்தை வலியுறுத்தும் 'தமிழ்நாடு' 32 பக்கங்களில் இரண்டணா விலையில் வெளியாவது யாவரும் வாங்கிப்படிக்க வாய்ப்பளிக்கிறது.

* * *

திராவிடமணி (வாரவெளியீடு)

[ஆசிரியர்: எம். மாணிக்கவாசகம்; கிடைக்குமிடம்: 'திராவிடமணி', தெப்பக்குளம், திருச்சி; விலை ஓரணா.]

புத்தம் புதிய முறையில், புதுபுது அம்சங்களோடு வெளிவருகிறது 'திராவிடமணி'. திராவிடமணிக்கு இது புதிய சகாப்தந்தான்.

* * *

தோழன் (மாதவெளியீடு)

ஆசிரியர்: ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ.; கிடைக்குமிடம்: திராவிடப்பாசறை, 8-A பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை. விலை நான்கணா.]

திராவிடர் கழகக் கொள்கைகளை, விளக்குவதையே முதற் கடமையாகக் கொண்டு, வெளிவந்துள்ளது "தோழன்". 'தோழன்' தனது கடமையில் வெற்றி பெற்று வாகை சூடவேண்டுமென்பது திராவிடரனைவருடையவும் ஒருமித்த எண்ணமென்பதில் ஐயமில்லை; அதில் நாமும் பங்குகொள்கிறோம்.

* * *

**தமிழ்ச்சுடர்** (மாதவெளியீடு)

[ஆசிரியர் மீ. சு. இளமுருகனர்; கிடைக்குமிடம்: தமிழ்ச்சுடர்ப்பதிப்பகம், பெரியகுளம், மதுரை; விலை ஆறணு]

தமிழ், தமிழர், தமிழ்நாடு மேனமை கருதிப்பணியாற்றும் 'தமிழச்சுடருள' பல கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கவிதைகள் சிலவும் சிறப்புடன் மிளிருகின்றன.

* * *

**கதிரவன்** (மாதமிருமுறை வெளியீடு)

[ஆசிரியர்: புலவர் பி. செல்வராஜ்; கிடைக்குமிடம்: கதிரவன் நிலையம்' 64 பிராட்வே, சென்னை; விலை ஆறணு]

பத்திரிகையொன்று வெற்றிகரமாக நடத்துவதற்கு பணபலமோ, எழுத்துத்திறமையோ மட்டும் போதாது பத்திரிகைத்துறைபபழக்கமும் பயிற்சியும், தேர்ச்சியும் திறமையும் மிகமிக வேண்டற்பாலதென்ற உண்மையை நிலைநாட்டிவிட்டார் ஆசிரியர் செல்வராஜவர்கள் தனது ஈடுஎடுப்பில்லா 'கதிரவன்' மூலம். திராவிட, இஸ்லாமியரின் ஒப்புயர்வற்றக்கருவூலமாகத் திகழும் "கதிரவன்", என்பதை, அதன் முதல் இதழைக்கண்டோரே உறுதியாகக் கூறிவிடுவர். வல்லுநர் செல்வராஜவர்களைக்கண்டு திராவிடம் பெருமைப்படுகிறது; அவரைப் பாராட்டுகிறது. திராவிடம் உறும்பெருமையில் நமக்கும் பங்குண்டு.

* * *

**இந்து சட்டத் தொகுப்பு**- திருத்தமும் கருத்தும்

'திராவிடர் சட்டத்தைத் தழுவிய' இந்நூலின் ஆசிரியர் முன்னாள் அமைச்சர் தோழர் எஸ். முத்தையா அவர்களாவர். வெளியிட்டோர்: தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தார், 8. நம்மாழ்வார் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை; விலை ஆறணு]

வெளி வருகிறது விரைவில்!
கலையுலகில் ஒரு புதுமை!

# காரல் மார்க்ஸ்

ஆசிரியர்: எஸ். சதாசிவம்
விலை ரூ. 1 0 0

•

விவரங்கட்கு:
**இன்பவாழ்வு பதிப்பகம்**
ஆர். எஸ். புரம். போஸ்ட்
கோயமுத்தூர் ஜில்லா

# PRINTERS!

**ARE YOU IN NEED OF CASES, STANDS, RACKS, GALLEYS ETC.?**

DO YOU WANT THEM TO BE CHEAP AND DURABLE ONES?

•

Then please apply to:

## S. P. G. SWAMY & CO.

6, ARIMUTHU ACHARI STREET,
**TRIPLICANE, MADRAS.**

*Printed by A. K. Jayaraman at Jothi Press, Triplicane, Madras 5. Edited and Published by B. Ganesan B. A. (Hons.) at No. 6, Arimuthu Achary Street, Triplicane, Madras 5.*